பக்கங்கள்: 12

# காலைக்கதிர்
Kalaikathir

விடியல் 03 | வள்ளுவர் ஆண்டு 2050 | ஆவணி 04 புதன்கிழமை 21.08.2019 | கதிர் 289

**இனி அது ரகசியம் அல்ல!**

ஓர் எம்.பி. ஆசனம் தொடர்பில் இரண்டு முன்னாள் ஜனாதிபதிகளிடமிருந்து கோரிக்கை வந்திருப்பதால் முடிவு செய்ய முடியாமல் முடியைப் பிய்த்துக் கொண்டு அல்லாடுகின்றாராம் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன என்று கொழும்பில்

பக்கம் 02 »



## சவேந்திர சில்வாவை இராணுவத் தளபதியாக்கி மக்களுக்குத் துரோகமிழைத்துள்ளார் ஜனாதிபதி

### கடுமையாகச் சாடுகின்றார் யஸ்மின் சூகா

கொழும்பு, ஓக. 21

இலங்கைத் இராணுவத் தளபதியாக லெப்.ஜெனரல் சவேந்திர சில்வா நியமிக்கப்பட்டமையைக் கண்டித்துள்ள, யஸ்மின் சூகா தலைமையிலான அனைத்துலக உண்மை மற்றும் நீதிக்கான திட்டம், இந்த நியமனத்தின் மூலம் இலங்கை அரசு தனது மக்களுக்குத் துரோகம் இழைத்துள்ளதாக தெரிவித்துள்ளது.

ஒரு மோசமான போர்க்குற்றவாளியாகக் குற்றம்சாட்டப்

பக்கம் 02 »

## சவேந்திர சில்வாவின் நியமனம்; ஐ.நா.பொதுச்செயலரும் கவலை



நியூயோர்க், ஓக. 21

இலங்கை இராணுவத் தளபதியாக லெப்.ஜெனரல் சவேந்திர சில்வா நியமிக்கப்பட்டுள்ளமை குறித்து கவலையடைவதாக, ஐ.நா பொதுச் செயலர் அன்ரனியோ குட்டரெசின் சார்பில், அவரது

பக்கம் 11 »

## சவேந்திர சில்வாவின் கடைவாயில் தமிழ் மக்களின் இரத்தம் வழிகிறது!

### சபையில் சிறிதரன் எம்.பி. சீற்றம்



கொழும்பு, ஓக. 21

சவேந்திர சில்வாவின் கடைவாயில் தமிழர்களின் குருதி வழிகிறது என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் சி.சிறிதரன் தெரிவித்தார்.

பக்கம் 11 »

## கனடாவும் கண்டிப்பு



கொழும்பு, ஓக. 21

இலங்கையின் புதிய இராணுவத் தளபதியாக நியமிக்கப்பட்டுள்ள மேஜர் ஜெனரல் சவேந்திர சில்வா மீது மனித உரிமை மீறல்கள் தொடர்பான குற்றச்சாட்டுகள் உள்ளன எனக் கனடா

பக்கம் 11 »

### தளபதி நியமனத்தால் சர்ச்சை;

## ஊடகவியலாளர் சந்திப்பை ஒத்திவைத்தது இராணுவம்

கொழும்பு, ஓக. 21

இலங்கை இராணுவம் ஆண்டு தோறும் நடத்தும், கொழும்பு பாதுகாப்பு கருத்தரங்கு தொடர்பாக நேற்று நடத்தவிருந்த ஊடகவியலாளர் மாநாடு திடீரெனக் காலவரையின்றி ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

பக்கம் 11 »

# இலங்கையின் இறைமையில் வெளியார் தலையிடக்கூடாது

## சவேந்திர சில்வா நியமனத்துக்கு எழுந்த கடும் எதிர்ப்புகளை அடுத்து அரசு அதிரடி

கொழும்பு, ஓக. 21

இராணுவத் தளபதியாக லெப். ஜெனரல் சவேந்திர சில்வா நியமிக்கப்பட்டமை நாட்டின் இறையாண்மையுடன் தொடர்புடைய விவகாரம், அதில் வெளிச்சக்திகள் தலையிடக்கூடாது என இலங்கை வெளிவிவகார அமைச்சு தெரிவித்துள்ளது.

பக்கம் 11 »

## 7,000 அடி உயரத்தில் இருந்து விழுந்த படை அதிகாரி சாவு!

கொழும்பு, ஓக. 21

இலங்கை இராணுவச் சிறப்புப் படைப் பிரிவின் அதிகாரி ஒருவர், பரசூட்டில் இருந்து குதித்தபோது, நிலத்தில் வீழ்ந்து மரணமானார்.

அம்பாறை விமானப்படைத்

பக்கம் 11 »

## நவாலி வடக்கில் வீடொன்றினுள் புகுந்து ரௌடிகள் அட்டகாசம்!

யாழ்ப்பாணம், ஓக. 21

நவாலி வடக்கிலுள்ள வீடொன்றுக்குள் புகுந்த அடாவடிக் கும்பல் அங்கிருந்த இளைஞனை வாளால் வெட்டிக் காயப்படுத்தியதுடன் வீட்டின் தளபாடங்களைப் பெற்றோல்

பக்கம் 11 »

## இந்திய மீனவர் நால்வர் கைது



யாழ்ப்பாணம், ஓக. 21

நெடுந்தீவு கடற்பரப்பில் அத்துமீறி மீன்பிடியில் ஈடுபட்டனர் என்ற குற்றச்சாட்டில் நான்கு இந்திய மீனவர்களைக் கடற்படையினர்

பக்கம் 11 »

## எல்லை மீறுகிறது அமெ.!



### எச்சரிக்கின்றார் வீரவன்ஸ

கொழும்பு, ஓக. 21

இராஜதந்திர எல்லைகளை மீறி அமெரிக்கா இலங்கையின் உள்ளக விவகாரங்களில் தலையிடுவதாகத் தேசிய சுதந்திர முன்னணியின் தலைவர் விமல் வீரவன்ஸ குற்றஞ்சாட்டியுள்ளார்.

இராணுவத் தளபதியாக சவேந்திர சில்வா நியமிக்கப்பட்டமை குறித்து

பக்கம் 11 »

## ஒட்டுமொத்த அழிவுகளுக்கும் கோட்டாபயவே முழு காரணம்

### தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு குற்றச்சாட்டு

யாழ்ப்பாணம், ஓக. 21

வடக்கு, கிழக்கில் ஏற்பட்ட ஒட்டுமொத்தமான அழிவுகளுக்கும் காரண கர்த்தாவாக இருப்பவர் கோட்டாபய என்பதே உண்மை என முன்னாள் கிழக்கு மாகாண உறுப்பினர் இரா. துரைரெட்ணம் தெரிவித்துள்ளார் .

பக்கம் 11 »

## சவேந்திர சில்வா எமக்கு முக்கியம்

### கூறுகிறார் அமைச்சர் சம்பிக்க

கொழும்பு, ஓக. 21

சவேந்திர சில்வா இராணுவத் தளபதியாக நியமிக்கப்பட்டமைக்கு எதிர்ப்பு வெளி

பக்கம் 11 »

## 16 கிலோ கேரள கஞ்சாவுடன் இருவர் புங்குடுதீவில் கைது!

யாழ்ப்பாணம், ஓக. 21

புங்குடுதீவுப் பகுதியில் 16 கிலோ கிராம் கேரளக் கஞ்சாவுடன் சந்தேகநபர்கள் இருவர் கைது செய்யப்பட்டனர் என்றுஊர்காவற்றுறைப் பொலி

பக்கம் 11 »

## சஹ்ரானிடம் பயிற்சி பெற்றனரா? மௌலவிகள் இருவர் கைதாகினர்

கொழும்பு, ஓக. 21

ஏப்ரல் 21 உயிர்த்த ஞாயிறு தினத்தன்று நாட்டில் நடத்தப்பட்ட பயங்கரவாதத் தாக்குதல்களின் முக்கிய சூத்திரதாரியான தேசிய

பக்கம் 11 »

# தீவகக் குடிதண்ணீர்த் திட்டத்தை ஆரம்பித்து வைக்கிறார் மைத்திரி



யாழ்ப்பாணம், ஓக. 21

யாழ். குடாநாட்டின் குடிதண்ணீர்ப் பிரச்சினைத் தீர்வு காணத் தயாரிக்கப்பட்டுள்ள மாற்றுக் குடிதண்ணீர்த் திட்டப் பணிகள் எதிர்வரும் 30ஆம் திகதி ஆரம்பிக்கப்படவுள்ளன.

இந்தப் பணியை ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன ஆரம்பித்து வைக்கவுள்ளார்.

கடந்த 2018 ஆம் ஆண்டு ஓகஸ்ட் மாதம் ஆரம்பித்து இந்த ஆண்டு ஓகஸ்ட் மாதம் நிறைவடைய வேண்டிய இந்தத் திட்டம் வன உயிரிகள் திணைக்களத்தின் முட்டுக்கட்டையால் ஓராண்டு தாமதமாக ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

யாழ்ப்பாணம் குடிதண்ணீர்ப்பிரச்சினை நீண்டகாலமாக பலதரப்பினராலும் பேசப்பட்டது. அதற்குப் பல்வேறு தீர்வுகளும் முன்வைக்கப்பட்டன. இரணைமடுவிலிருந்து குடிதண்ணீரைக் கொண்டு வருதல், வடமராட்சி கிழக்கிலிருந்து கடல் நீரை நன்னீராக்குதல் என்று பல்வேறு திட்டங்கள் முன்மொழியப்பட்டபோதும், அதிலுள்ள அரசியல் இழுபறிகள் காரணமாக எந்தவொரு திட்டமும் இன்னும் நடைமுறைப்படுத்தப்படவில்லை.

இந்த நிலையில் 'மாற்றுக் குடிதண்ணீர்த் திட்டம்' என்ற பெயரில், வடமராட்சி நீரேரியில் உள்ள நீரை குளத்தில் தேக்கி விநியோகிக்கும் திட்டம் தயாரிக்கப்பட்டது. 200 கோடி ரூபா செலவில் இந்தத் திட்டம் நடைமுறைப்படுத்தப்பட உள்ளது. (ஐ)

# புதிதாக வாங்கிய மோட்டார் சைக்கிளை சிறிது நேரத்தில் பறிகொடுத்த யாழ் வாசி!

யாழ்ப்பாணம், ஓக. 21

கடையில் இருந்து புதிதாக வாங்கிய மோட்டார் சைக்கிள் சில மணி நேரத்திலேயே மர்மக் கும்பலினால் பறித்துச் செல்லப்பட்ட சம்பவம் இணுவில் பகுதியில் நேற்று முன் தினம் மாலை இடம்பெற்றுள்ளது.

இணுவில் பகுதியைச் சேர்ந்த இளைஞன் ஒருவர் யாழ்ப்பாணத்தில் உள்ள ஓர் மோட்டார் சைக்கிள் விற்பனை நிலையத்தில் நேற்று முன் தினம் 2 இலட்சத்து 38 ஆயிரம் ரூபா பெறுமதியான மோட்டார் சைக்கிள் ஒன்றை வாங்கியுள்ளார்.

புதிதாக வாங்கிய அந்த வாகனத்தை ஆலயத்திற்குக் கொண்டு சென்று பூஜை வழிபாட்டில் ஈடுபட்டுள்ளார். பின்னர் தனது உறவினர் வீட்டுக்கு மாலை சென்றுள்ளார்.

உறவினர் வீட்டுக்குச் சென்றுகொண்டிருந்த போது மூன்று மோட்டார் சைக்கிள்களில் வந்த 9 பேர் கொண்ட மர்மக் கும்பல் அந்த இளைஞனைச் சரமாரியாகத் தாக்கிவிட்டு மோட்டார் சைக்கிளையும் பறித்துச் சென்றுள்ளது.

இந்தச் சம்பவம் தொடர்பில் பாதிக்கப்பட்ட இளைஞன் சுன்னாகம் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாட்டைப் பதிவு செய்துள்ளார். பொலிஸார் சம்பவம் தொடர்பில் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர். (ஐ-07)

# காணாமற்போனோர் அலுவலகம் யாழில் திறக்கப்பட்டால் எதிர்த்துப் போராட்டம்

## உறவினர்கள் அரசுக்கு எச்சரிக்கை

(எஸ்.நிதர்ஷன்)

யாழ்ப்பாணம், ஓக. 21

யாழ்.மாவட்டத்தில் காணாமற்போனோர் அலுவலகம் திறக்கப்பட்டால் அதனை எதிர்த்துப் போராட்டம் நடத்துவோம் என கூறியிருக்கும் வடக்கு – கிழக்கு மாகாண வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்கள், காணாமல் ஆக்கப்பட்டோர் அலுவலகம் ஊடாகப் பாதிக்கப்பட்ட தமக்கு நிதி மட்டுமே வழங்க முடியும், நீதியை வழங்க முடியாது எனவும் கூறினர்.

காணாமல் போனவர்கள் அலுவலகம் எதிர்வரும் 24ஆம் திகதி யாழ்.மாவட்டத்தில் திறக்கப்படவுள்ளதாக வெளியான செய்திகள் தொடர்பாக விளக்கமளிப்பதற்காக வடக்கு – கிழக்கு மாகாணங்களில் வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்கள்சங்கப்பிரதிநிதிகள்யாழ்.ஊடக அமையத்தில் நேற்று ஊடகவியலாளர்களைச் சந்தித்தனர். இதன்போதே அவர்கள் மேற்கண்டவாறு கூறினர்.

அவர்கள் மேலும் கூறுகையில் –

காணாமல்போனோர் செயலகத் தலைவர் சாலிய பீரிஸ் உள்ளிட்ட சகலரையும் சந்தித்து இந்த அலுவலகம் ஊடாக எமக்கு நீதி கிடைக்காது என்பதை நாங்கள் தெளிவாக சுட்டிக்காட்டியிருக்கின்றோம். இந்த அலுவலகத்தை வடக்கில் திறக்ககூடாது என்பதையும் நாங்கள் கூறியிருந்தோம்.

அப்போது ஆம் என்றவர்கள் இப்போது யாழ்.மாவட்டத்தில் 24ஆம் திகதி அலுவலகத்தை திறக்கவுள்ளதாகக் கூறியிருக்கின்றனர். அடுத்து வரும் ஐ.நா மனித உரிமைகள் ஆணையகக் கூட்டத் தொடரில் சர்வதேச நாடுகளையும் தமிழ் மக்களையும் ஏமாற்றுவதற்கான சதி முயற்சியாகவே இதனை நாம் பார்கின்றோம்.

எனவே காணாமல் ஆக்கப்பட்டோர் அலுவலகம் திறப்பதை நாங்கள் எதிர்க்கிறோம். அந்த எதிர்ப்புப் போராட்டத்தில் பல்கலைக்கழக மாணவர்கள், பொது அமைப்புக்கள், பொதுமக்கள் என அனைவரும் கலந்து கொண்டு ஒத்துழைப்பு வழங்கவேண்டும் என கோரிக்கை முன்வைக்கின்றோம் – என்றனர். (ஐ-7)

### இனி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

விடயமறிந்த வட்டாரம் ஒன்று நேற்றுத் தகவல் வெளியிட்டது.

குருநாகல் மாவட்டத்திலிருந்து ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி சார்பில் ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பின் பட்டியலில் போட்டியிட்டு நாடாளுமன்றுக்குத் தெரிவுசெய்யப்பட்ட சாலிந்த திஸநாயக்கா இந்த மாத முற்பகுதியில் காலமானார்.

இதனால் குருநாகல் மாவட்டத்தில் ஐ.ம.சு. கூட்டமைப்பின் எம்.பிக்கள் பட்டியலில் ஓரிடம் காலியானது. அந்த மாவட்டத்தில் அடுத்த நிலையில் நாடாளுமன்றுக்குத் தெரிவாக வேண்டிய – விருப்பு வாக்கு வரிசையின் பட்டியலில் – இருந்தவர் சாந்த பண்டார.

ஆனால் அவரை ஏற்கனவே தேசியப் பட்டியல் மூலம் நாடாளுமன்றுக்கு நியமித்தார் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன.

சாலிந்த திஸநாயக்கா எம்.பி. காலமானதும் அதனால் ஏற்படும் வெற்றிடத்துக்கு மாவட்டப் பட்டியல் மூலம் நாடாளுமன்ற உறுப்பினர் பதவியை ஏற்பதற்காக சாந்த பண்டார தமது தேசியப் பட்டியல் எம்.பி. பதவியை இராஜினாமச் செய்தார்.

அதனால், ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பின் தேசியப் பட்டியல் எம்.பி. பதவி ஒன்று காலியாகியுள்ளது.

அந்த இடத்துக்கே கண் வைத்துள்ளனர் முன்னாள் ஜனாதிபதிகளான மஹிந்த ராஜபக்ஷவும் சந்திரிகா குமாரதுங்கவும்.

அந்த எம்.பி. பதவியைத் தாம் பொது ஜனபெரமுனவின் ஜனாதிபதி வேட்பாளராக நியமித்திருக்கும் தமது சகோதரர் கோட்டாபய ராஜபக்ஷவுக்கு வழங்கும்படி கோரும் தகவல் ஒன்றை ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவுக்கு அனுப்பியிருக்கின்றாராம் மஹிந்த ராஜபக்ஷ.

இதன் மூலம் ஒரு கல்லில் இரண்டு மாங்காய்களை வீழ்த்த முயற்சிக்கின்றார் மஹிந்தர் என்று அந்த வட்டாரம் தகவல் வெளியிட்டது.

கோட்டாபய ராஜபக்ஷ நாடாளுமன்றத்தையும் தமது பிரசாரக் களமாக்கித் தன்னை தேர்ந்த அரசியல்வாதியாக நிரூபிக்க ஒரு வாய்ப்புக் கிட்டும்.

அதேநேரம், ஜனாதிபதித் தேர்தலுக்கு அவரது இரட்டைப் பிரஜாவுரிமை விடயம் ஒரு தடங்கல் எனக் கூறும் தரப்புகள் அவர் எம்.பி. யானவுடன் விரும்பினால் நீதிமன்றத்தை அணுகி அந்தச் சர்ச்சையைக் கிளப்பிப் பார்க்கட்டும், அதற்கு ஒரு சந்தர்ப்பம் வழங்குவோம் என்பதும் மஹிந்தரின் கருத்து.

ஜனாதிபதித் தேர்தலுக்கான வேட்புமனுத் தாக்கலுக்கு முன்னரே அந்த சர்ச்சைக்கு ஒரு முடிவு கிட்டிவிடும் என்பதால் அது நல்ல நகர்வு என்று கருதுகின்றார் மஹிந்தர்.

இரட்டைப் பிரஜாவுரிமை கொண்டவர் ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிட முடியாது என்பது மாத்திரமல்ல, நாடாளுமன்ற உறுப்பினர் பதவியையும் வகிக்க முடியாது என்பதுதான் சட்டம்.

அந்தப் பிரச்சினை கோட்டாபயவுக்கு இருக்குமானால், அவர் எம்.பியாகும் போது தரப்புகள் நீதிமன்றுக்குச் செல்லும், அதன் போது தீர்க்கமான முடிவு ஒன்று வரும் எனக் கருதுகின்றார் மஹிந்தர்.

ஆகவே, கோட்டாபயவின் இரட்டைப் பிரஜாவுரிமைச் சிக்கல், கடைசியில் ஜனாதிபதித் தேர்தல் வேட்புமனுத் தாக்கலின் போது குழப்பத்தை ஏற்படுத்திப் பின்னடைவு தந்துவிடாமல் இருப்பதைத் தவிர்ப்பதற்காக – அப்பிரச்சினை குறித்து நேரத்துடனேயே நீதிமன்றில் ஒரு தீர்க்கமான முடிவை எடுப்பதற்காக – இப்படி எம்.பி. பதவியை அவருக்கு வழங்குவது உதவும் என்பதால் அந்தப் பதவியை சகோதரருக்கு வழங்க மஹிந்தர் வற்புறுத்துகின்றார்.

மறுபுறத்தில் வெற்றிடமாகியுள்ள அந்த எம்.பி. பதவியைத் தமக்குத் தரும்படி முன்னாள் ஜனாதிபதி சந்திரிக்கா குமாரதுங்கவும் சு.க. தலைவரான மைத்திரிபால சிறிசேனவுக்கு தெரிந்த வட்டாரங்கள் மூலம் தகவல் அனுப்பியிருக்கின்றார் எனக் கூறப்படுகின்றது.

சு.கவிலிருந்து ராஜபக்ஷ அணி வெளியேறி புதிய கட்சியில் இணைந்துவிட்டது. இந்நிலையில் சு.க. பெரிதும் நலிந்து கழுதை தேய்ந்து கட்டெறும்பான கதையாகிவிட்டது.

சு.கவின் யாப்புப்படி அக்கட்சி உறுப்பினர் ஒருவர் நாட்டின் ஜனாதிபதியாக இருந்தால் அவரே கட்சியின் தலைவராகவும் இருக்க வேண்டும்.

ஜனாதிபதி பதவியை விட்டு விலகிய சந்திரிகாவிடமிருந்து அப்போது சு.கவின் தலைமைப் பதவியைப் பறிப்பதற்காக, ஜனாதிபதியான மஹிந்த தரப்பினால் திட்டமிடப்பட்டு சு.க. யாப்புக்குக் கொண்டு வரப்பட்ட புதிய திருத்த விதிமுறையே இது.

மஹிந்த தரப்புக் கொண்டு வந்து அறிமுகப்படுத்திய அந்த விதிமுறையைப் பயன்படுத்தியே தாம் ஜனாதிபதியானதும் கட்சியின் தலைமைப் பதவியை மஹிந்தரிடமிருந்து பறித்து எடுத்தார் மைத்திரிபால சிறிசேன.

அந்த விதிமுறையின்படி, அடுத்த ஜனாதிபதித் தேர்தல் நடந்து முடியும் வரை சு.க. தலைமைப் பதவியை மைத்திரியிடமிருந்து யாரும் பிடுங்க முடியாது.

ஆனால், அடுத்த ஜனாதிபதித் தேர்தலில் சு.க. தரப்பைச் சேர்ந்த எவரும் போட்டியிட்டு வெல்வதற்கு வாய்ப்பு இல்லை என்பது யதார்த்த நிலைமையாகும்.

அந்தத் தேர்தல் முடிந்து, மைத்திரிபால சிறிசேன ஜனாதிபதி பதவியிலிருந்து இறங்கியதும் சு.க. தலைமைப் பதவியை அவரிடமிருந்து தாம் பிடுங்கி எடுக்கவும், தமது பெற்றோர்களான பண்டார நாயக்காக்ககள் ஸ்தாபித்த சு.கவை தமது புதிய தலைமையின் கீழ் மீண்டும் அடிமட்டத்திலிருந்து மக்கள் சக்தியாகக் கட்டி எழுப்பவும் –

திட்டம் வகுத்துள்ளாராம் சந்திரிகா. அதற்குத் தமக்கு ஒரு நாடாளுமன்ற உறுப்பினர் பதவி உதவியாக இருக்கும் எனக் கருதுகின்றாராம் அவர்.

அதனால்தான் வெற்றிடமாகவுள்ள தேசியப் பட்டியல் எம்.பி. பதவிக்கு அவர் கண்வைத்திருக்கின்றார்.

சு.கவிலிருந்து எம்.பியான மஹிந்த ராஜபக்ஷவும், அவரது அணியின் அறுபது எம்.பிக்களும் கட்சிமாறி பொதுஜனபெரமுனவில் இணைந்துவிட்டாலும், அவர்களுக்கு எதிராக ஒழுங்கு நடவடிக்கை எடுத்து, சு.க. உறுப்புரிமையை இழந் துள்ள அவர்களை எம்.பி. பதவிகளில் இருந்து அகற்றும் எண்ணம் மைத்திரியாருக்கு இல்லை எனத் தெரிகின்றது.

அதனால் மஹிந்தர் தொடர்ந்து எதிர்க்கட்சித் தலைவராக நீடிப்பார். அவரது அணியினர் அறுபது பேரும் எம்.பி. பதவிகளில் தொடருவார்.

ஜனாதிபதிப் பதவியில் கடைசி சில வாரங்களை எண்ணும் நிலையில் இருக்கும் மைத்திரியாரால் கட்சி ரீதியாக எந்த ஒழுங்கு நடவடிக்கையும் உஷாராக எடுக்கவே முடி யாது என்றும் தெரிவிக்கப்பட்டது.

- மின்னல் -

### சவேந்திர...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

படும், மேஜர் ஜெனரல் சவேந்திர சில்வாவை இராணுவத் தளபதியாக நியமித்து, ஜனாதிபதி நாட்டுக்குப் பெரும் பாதிப்பை ஏற்படுத்தியுள்ளார்.

அவருக்கு எதிராகப் போர்க் குற்றங்கள் மற்றும் மனித குலத்துக்கு எதிரான குற்றச்சாட்டுகள் உள்ள நிலையில், அவரது இந்த நியமனம் நல்லிணக்கச் செயல் முறைகளையும் முடிவுக்குக் கொண்டு வரப்படுவதை அடையாளப்படுத்துகிறது.

லெப்.ஜெனரல் சவேந்திர சில்வா வெளிநாடுகளுக்குப் பயணிப்பதற்கு – அதிகாரபூர்வப் பயணங்களை மேற்கொள்வதற்குக் கூட, நுழைவிசைவுகளை மறுக்குமாறு இலங்கையின் கூட்டாளி நாடுகளிடம் கோருவதாகவும் அந்த அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

அத்துடன், அவருக்கு அளிக்கப்பட்டுள்ள பதவி உயர்வு நாடு முழுவதும் அச்சத்தைத் தூண்டும், குறிப்பாக 2009 ஆம் ஆண்டில் லெப்.ஜெனரல் சவேந்திர சில்வாவின் மேற்பார்வையில் பொதுமக்கள் மீதான தாக்குதல்களில் பெரும் இழப்பைச் சந்தித்த நூறாயிரக்கணக்கான தமிழர்களிடையே, அச்சத்தை ஏற்படுத்தும் என, அனைத்துலக உண்மை மற்றும் நீதிக்கான திட்டத்தின் நிறைவேற்றுப் பணிப்பாளர் யஸ்மின் சூகா தெரிவித்துள்ளார்.

எண்பதுகளின் பிற்பகுதியில் ஜே.வி.பி. கிளர்ச்சியை நசுக்குவதில் தனது பங்குக்காக சவேந்திர சில்வா ஒருபோதும் பொறுப்புக் கூறவில்லை.

இதன்போது, படுகொலைகள், காணாமல் ஆக்கப்படுதல்கள், சித்திரவதை, பாலியல் வன்முறைகள், ஆயிரக்கணக்கான சிங்கள இளைஞர்கள் தடுத்து வைக்கப்பட்டிருந்தமை தொடர்பான நம்பகமான குற்றச்சாட்டுகள் உள்ளன.

அப்போது, கோட்டாபய ராஜபக்ஷவின் தலைமையின் கீழ், முதலாவது கஜபா ரெஜிமென்ட்டில், சவேந்திர சில்வா பணியாற்றியிருந்தார் என்றும் அந்த அறிக்கையில் கூறப்பட்டுள்ளது. (ஐ)

# கோட்டாவுடனான சந்திப்பு எமக்கு நம்பிக்கை தருகிறது

## கூறுகின்றார் டக்ளஸ் தேவானந்தா



கொழும்பு, ஓக. 21

தமிழ் மக்களின் கோரிக்கைகளோடு ஜனாதிபதி வேட்பாளார் கோட்டாபய ராஜபக்ஷவைச் சந்தித்து பேசிய விடயங்கள் குறித்து தமக்கு நம்பிக்கை அளித்திருப்பதாக ஈழ மக்கள் ஜனநாயக கட்சியின் செயலாளார் நாயகம் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் –

எந்தவொரு ஆட்சி இங்கு வந்தாலும் அவர்களுடன் பேரம் பேசித் தமிழ் மக்களின் அபிலாசைகளைத் தீர்த்து வைப்பதே எமது ஆழ் மன இலட்சிய அரசியல் விருப்பமாகும்.

அந்த வகையில் எவரும் விரும்பியோ விரும்பாமலோ ஆட்சி அதிகாரத்தில் உட்காரப்போகின்ற கோட்டாபய ராஜபக்ஷவை எதுவித அரசியல் பலமும் இன்றி, அந்த அரசியல் பலத்தை எமது மக்கள் இனிவரும் காலத்தில் வழங்குவார்கள் என்ற நம்பிக்கையோடு சந்தித்து பரஸ்பரம் உரையாடியிருந்தோம்.

– இலங்கைத்தீவின் சகல இன மக்களும் ஏற்றுக்கொண்ட 13 ஆவது திருத்தச்சட்டத்தை முழுமையாக நடைமுறைப் படுத்துவதில் இருந்து தொடங்கி, அதை மேலும் பலப்படுத்தி அரசியல் தீர்வு நோக்கிச் செல்வது,....

– எமது தேசத்தை தூக்கி நிறுத்தும் அபிவிருத்திப் பணிகளை நாம் விட்ட குறையில் இருந்து மறுபடி தொடங்குவது,....

–முதற்கட்டமாக வேலையற்ற தமிழ் இளைஞர் யுவதிகளில் ஒரு இலட்சம் பேர்களுக்கு வேலை வாய்ப்புகளை பெற்றுக் கொடுப்பது.

– யுத்தம் காரணமாக கல்வி தகைமையை இழந்து நிற்கும் தமிழ் இளைஞர் யுவதிகளுக்கு தற்காலிக வேலை வாய்ப்புகளைப் பெற்றுக்கொடுப்பதோடு கால அவகாசத்தின் அடிப்படையில் அதற்கான கல்வித்தகைமையை அவர்கள் பெற்றிடவும்,வேலையை நிரந்தரமாக்கவும் ஏற்பாடு செய்வது.

– காணாமல் போன உறவுகளை தேடும் மக்களின் கண்ணீருக்கு பரிகாரம் பெற்று கொடுப்பது, அரசியல் கைதிகளை விடுவிப்பதற்கான முயற்சியில் வெற்றி காண்பது. நாம் ஏற்கனவே விடுவித்து இதுவரை மீட்கப்படாத எமது மக்களின் காணி நிலங்களை விடுவிப்பது.

– வீடற்ற மக்களுக்கு வீடு,. நிலமற்ற மக்களுக்கு நிலம்,. மீள்குடியேறிய மக்களுக்கு நிரந்தர வாழ்வியல் உரிமை. இன நல்லிணக்கத்தைச் சீர்குலைக்கும் வகையில் தமிழர்கள் வாழும் பிரதேசங்களில் நடைபெறும் இன, மத ரீதியிலான சகல திணிப்பு நடவடிக்கைகளையும் தடுத்து நிறுத்துவது..

– முள்ளிவாய்க்கால் வரை யுத்தத்தில் கொல்லப்பட்ட சகல மனித உயிர்களுக்கும் மரியாதை செலுத்தும் வகையில் பொது சதுக்கத்தையும் அதற்கான ஒரு நினைவு நாளையும்உருவாக்குவது.

இது போன்ற எமது மக்களின் அபிலாசைகள் குறித்து எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் வெல்லப் போகின்ற கோட்டாபயவுடன் நாம் மனம் திறந்து பேசியதில் எமக்கு நம்பிக்கை தரும் சமிக்ஞைகள் கிடைத்திருக்கின்றன.

மாற்றமொன்று இந்த நாட்டில் விரைவில் நிகழும் என்பதில் மாற்றமில்லை. தமிழ் பேசும் மக்களாகிய நாம் இந்த மாற்றத்தில் பங்கு தாரர்களாக இருக்கப் போகின்றோமா? பார்வையாளர்களாக இருக்கப்போகின்றோமா? அல்லது வெறும் எதிர்ப்பாளார்களாக இருக்க போகின்றோமா? இதை தமிழ் பேசும் மக்களாகிய நாமே தீர்மானிக்க வேண்டும். நிகழப்போகின்ற அந்த மாற்றத்தில் தமிழ் பேசும் மக்களின் பங்களிப்பும் கணிசமான அளவு இருந்தாக வேண்டும். அதன் ஊடாகவே அந்த மாற்றத்தின் விமோச னங்களை தமிழ் பேசும் மக்களும் அனு பவிக்க முடியும்.

மாற்றத்தை உருவாக்குவோம் என்று தமிழ் மக்களிடம் கூறி இன்றைய அரசை உருவாக்க பங்களித்த சகதமிழ் கட்சிகளே இன்று அதே அரசு தம்மை ஏமாற்றி விட்டதாக புலம்பத்தொடங்கி விட்டார்கள்.

அவர்களைப்போல் நானும் எதிர்



காலத்தில் எமது அரசு எம்மை ஏமாற்றி விட்டதாக ஒருபோதும் கூறப்போவதில்லை. யாருக்கு தமிழ் மக்கள் வாக்களிக்க வேண்டும் என்று நான் கோருகின்றேனோ, அவர்களுக்கு வாக்களித்தால் அதற்கான பொறுப்பை நானே ஏற்பேன்.

எமது மக்களிடம் இன்று இருப்பது வாக்குப்பலம் ஒன்றே. அதை வைத்து எமது மக்களின் சகல உரிமைகளையும் வென்றெடுத்தே தீருவோம் என்ற எமது உறுதியான ஆத்ம பலம் எம்மிடம் உண்டு.

எமது அகராதியில் எமது சொந்தச் சலுகைகளைப் பெறுவதற்காக எக்காலத்திலும் எந்த அரசுடனும் நாம் உறவு வைத்திருந்தவர்கள் அல்லர். அதற்காக எமது மக்களை எவருக்கும் வாக்களிக்குமாறு நாம் கேட்டதும் இல்லை. இனியும் அது நடக்காது.

நிகழப்போகின்ற ஆட்சி மாற்றத்தை வைத்து எமது மக்களின் வாக்குப்பலத்தால் அனைத்து உரிமைகளையும் நான் பெற்று தருவேன். யதார்த்தமான, உறுதியான எமது அரசியல் வழிமுறைக்கு யதார்த்தமானதும், உறுதியானதுமான நாட்டின் தலைவர் ஒருவர் உருவாகும் போது, அவரது வருகையை நாம் சரிவர கையாள வேண்டும் – என்றார். (ஐ)

# கறுப்பாகியது கடல்



முல்லைத்தீவு, ஓக. 21

முல்லைத்தீவு நாயாறு தொடக்கம் கொக்கிளாய் வரையிலான கடற்பகுதியில் நேற்று முன் தினம் பிற்பகல் முதல் மாற்றங்கள் ஏற்பட்டுள்ளன என அந்தப் பகுதி கடற்றொழிலாளர்கள் தெரிவித்துள்ளனர்.

கடல் நீர் கறுப்பு நிறத்தில் காணப்பட்டுள்ளதுடன், கடற்கரையில் கறுப்பு நிறத்தில் தார் போன்ற கறை படிந்து காணப்படுகிறது.

அந்தத் தார் போன்ற மர்மப்பொருள் மீண்டும் அலையில் சிக்கிக் கடலுக்குச் செல்லாமல் இருப்பதாக கடற்றொழிலாளர்கள் குறிப்பிட்டுள்ளனர்.

கறுப்பு நிறத்திலான இந்தத் திரவம் பாதங்களில் பட்டால், அதனை நீக்குவது சிரமமாக உள்ளது. அத்துடன் கடுமையான துர்நாற்றம் வீசுவதாகவும் கடற்றொழிலாளர்கள் மேலும் கூறினர். (ஐ)

# 9524 சாரதிகள் கைது

கொழும்பு, ஓக. 21

மதுபோதையில் வாகனம் செலுத்திய குற்றச்சாட்டில் கைதுசெய்யப்பட்ட சாரதிகளின் எண்ணிக்கை 10 ஆயிரத்தை அண்மித்துள்ளது.

மதுபோதையில் வாகனம் செலுத்தும் சாரதிகளை கைதுசெய்வதற்கான சோதனை நடவடிக்கை, கடந்த மாதம் 5ஆம் திகதி முதல் நாடு முழுவதும் முன்னெடுக்கப்பட்டு வருகின்றது.

இந்த நிலையில், இதுவரை 9524 சாரதிகள் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

நேற்று முன் தினம் காலை 6 மணி முதல் நேற்றுக் காலை 6 மணிவரையான 24 மணித்தியாலங்களில் 125 சாரதிகள் கைது செய்யப்பட்டுள்ளனர். (ஐ)

# யாழ். சின்மயா மிஷனில் கிருஷ்ண ஜெயந்தி

யாழ்ப்பாணம், ஓக.21

யாழ் சின்மயா மிஷனால் எதிர்வரும் 24 ஆம் திகதி சனிக்கிழமை மாலை 7.15 முதல் 8.00 வரை இல 700, பருத்தித்துறை வீதி, நல்லூர் எனும் விலாசத்தில் அமைந்துள்ள சின்மய ஞானவேல் ஆச்சிரமத்தில் கிருஷ்ண ஜெயந்தி நிகழ்வு நடத்தப்படவுள்ளது.

இதில் பஜனை, பூஜை, சத்சங்கம் ஆகிய நிகழ்வுகள் இடம்பெற உள்ளன. அனைவரும் வருக என அழைக்கின்றது சின்மயா மிஷன்.







# நமது பார்வை

உண்மை – நேர்மை – பக்கம் சாராமை
ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி – 021 222 3000,
மின்னஞ்சல் – kalaikkathirnews@gmail.com
இணையம் – https://kalaikathir.online

## ஆற்றாண்மையின் விளைவு

ஆற்றாண்மையின் – இயலாமையின் – விளைவு சில சமயங்களில் அதிகப்பிரசங்கித்தனமான காரியங்களை ஆற்றத் தூண்டிவிடும்.

உதாரணத்துக்கு வடக்கு, கிழக்கு மாகாண சபையை நிர்வகித்த – முதலமைச்சர் வரதராஜப்பெருமாள் தலைமையில் நடைபெற்ற – ஈ.பி.ஆர்.எல்.எவ்., ஈ.என்.டி.எல்.எவ். கூட்டு ஆட்சியைக் குறிப்பிடலாம்.

அமைதிப் படை என்ற பெயரில் வடக்கு, கிழக்கில் காலூன்றி நின்ற இந்தியப் படையின் முழுப் பின்புல ஆதரவில் சுமார் ஒன்றரை வருடங்கள் நடைபெற்ற அந்த மாகாண ஆட்சி, ஒருபுறம் பிரேமதாஸ அரசின் அழுத்தம், இலங்கை இராணுவத்தின் கெடுபிடி, மறுபுறம் விடுதலைப் புலிகளின் ஆக்ரோஷமான எதிர்ப்பு ஆகியவற்றுக்கு மத்தியில் ஓரளவு கட்டமைக்கப்பட்ட நிர்வாக நடவடிக்கையை முன்னெடுத்தது. முகம் கொடுக்க முடியாத கடும் நெருக்கடிகள், நிதிப் பற்றாக்குறை, பல துறை அழுத்தங்கள் போன்றவற்றுக்கு மத்தியிலும் வடக்கு, கிழக்கு மாகாண நிர்வாகத்துக்கான அடிப்படைகளை சிலாகிக்கத்தக்க அளவுக்கு அதன் அரசியல் தலைமையும், அதிகாரிகள் வர்க்கமும் முன்னெடுத்தன என்பது மறுக்க முடியாத உண்மை.

1990 முற்பகுதியில் கட்டவிழ்ந்த அரசியல் புறச் சூழல் காரணமாக இலங்கையிலிருந்து இந்தியப் படைகள் மூடை முடிச்சுகளைக் கட்டிக் கொண்டு புறப்பட வேண்டிய கட்டாயம் ஏற்பட்டது. அப்போது இராணுவக் கள யதார்த்தம் வடக்கு – கிழக்கு மாகாண நிர்வாகத்தை நடத்திய வரதராஜப் பெருமாள் தலைமையிலான அரசியல் தலைமைத்துவத்தையும், ஈ.பி.ஆர்.எல்.எவ்பையும் இங்கு தங்கி நின்று முகம் கொடுக்க இயலாத இக்கட்டில் மாட்டிவிட்டதால் வேறு வழியின்றி, இந்திய அமைதிப் படையுடன் கூண்டோடு ஒரிஸாவுக்குப் புறப்பட வைத்தது.

வடக்கு – கிழக்கு மாகாண நிர்வாகத்தை வைத்திருந்தும் ஏதும்செய்ய முடியவில்லையே என்ற ஆற்றாண்மை – இயலாமை – திருகோணமலை மண்ணை விட்டுக் கடைசியாகக் கப்பலில் புறப்பட முன்னர், அந்த நிர்வாகத் தலைமையை தமிழீழப் பிரகடனத்தைச் செய்து விட்டுப் போகத் தூண்டியது.

ஆற்றாண்மையால் வெளியிடப்பட்ட அதிகப் பிரசங்கித்தனமான அறிவிப்பின்றி அது வேறில்லை.

அதே கட்டத்தில்தான் இப்போது இலங்கை ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன இருக்கின்றார்.

அவரை ஒற்றைக் காலில் நின்று ஆட்சிப்பீடத்துக்கு கொண்டு வந்த ஐக்கிய தேசியக் கட்சி உள்ளிட்ட ஐக்கிய தேசிய முன்னணியுடன் அவர் இன்று முழு அரசியல் எதிரி. அத் தரப்பு அவரையும், அவர் அத் தரப்பையும் கைவிட்டு, எதிரி நிலைப்பாடு எடுத்து நீண்டகாலம் கடந்து விட்டது.

அவரது கட்சியும் கூட மெல்ல மெல்ல அவரைக் கைவிட்டு நழுவி, பெரும்பகுதி மஹிந்த ராஜபக்ஷ தலைமையிலான ஸ்ரீலங்கா பொதுஜனப் பெரமுனவில் கரைந்து விட்டது.

எஞ்சியிருக்கும் அவரது கட்சியின் மிச்ச சொச்சமும் கூட அவர் பதவியை விட்டு விலகி அடுத்த நாள் முன்னாள் ஜனாதிபதி சந்திரிகாவின் கைகளுக்குப் போய்விடுமோ என்ற அந்தரிப்பு நிலைமை.

அவர் அண்மைக் காலத்தில் நம்பிக்கை வைத்துக் கரை சேர்ந்த மஹிந்த ராஜபக்ஷவின் தரப்புக் கூட அவரைப் பொருட்படுத்தாமல் தனது ஜனாதிபதித் தேர்தல் வேட்பாளரை அறிவித்து விட்டது.

இப்போது ஜனாதிபதி மைத்திரிபால பெரும்பாலும் அரசியலில் ஏதிலியாய்த் தனித்து விடப்பட்டவர் என்பதுதான் நிலைமை. தனது கட்சி என்று கூறும் – அவர் தலைமை வகிக்கும் சுதந்திரக் கட்சி கூட – முழுதாக அவருடன் நிற்குமா என்பது கேள்விக்குறியே.

இருக்கின்ற நிறைவேற்று அதிகாரம் கூட இன்னும் பன்னிரண்டு முதல் பதினைந்து வாரங்கள் வரைதான். மீண்டும் ஜனாதிபதியாகும் அவரது எண்ணம் பகல் கனவாகி வருவது அவருக்கே துலாம்பரமாகத் தெரியத் தொடங்கி விட்டது.

இப்போதும் நிறைவேற்று அதிகாரம் கைகளில் உண்டு. ஆனால் அதைப் பிரயோகித்து அரசியல் ரீதியாக எதுவும் செய்ய முடியாத ஆற்றாண்மை நிலைமைதான் உள்ளது.

அந்த ஆற்றாண்மையின் விளைவான அதிகப் பிரசங்கித்தனமான நடவடிக்கையில் ஒன்றுதான் லெப்டினன்ட் ஜெனரல் சவேந்திர சில்வாவை இராணுவத் தளபதியாக நியமித்த செயற்பாடு எனக் கருதுகிறோம்.

ஐ.நா. முதல் அமெரிக்கா வரை பல தரப்புகளினாலும் சர்வதேச மனித உரிமைகள் அமைப்புக்களினாலும் யுத்தக் குற்றங்களோடு தொடர்புபட்டவர்கள் என்று குற்றம் சுமத்தப்பட்டிருக்கும் ஒருவரை தமது ஆட்சிக் காலத்தின் கடைசிக் காலத்தில் – அந்திம வேளையில் – பிடிவாதம் பிடித்து, இராணுவத் தளபதியாக நியமித்தமை ஒரு வகையில் அவரது அரசியல் ஆற்றாண்மையின் விளைவுதான்.

இதன்மூலம் நாட்டிற்கும், நாட்டின் சர்வதேச உறவாடல்களுக்கும், உள்நாட்டின் நல்லிணக்கத் தீர்வு முயற்சிகளுக்கும், தொடர்ந்து ஆட்சிப் பொறுப்பை ஏற்கப் போகின்றவர்களுக்கும் பாதிப்பையும் தொல்லையை ஏற்படுத்தி விட்டு, வரதராஜப்பெருமாள் புறப்பட்டமைபோல ஆட்சிக் கட்டிலிருந்து வெளியேறப் போகின்றார் மைத்திரியார்...

இலங்கை நாடுதான் பாவம். யுத்தக் குற்றங்கள் சுமத்தப்பட்டவரை இராணுவத் தளபதியாகக் கொண்டிருப்பதன் மோசமான விளைவுகளை அதுதானே எதிர்கொள்ளப் போகின்றது....!

# அவதூறு ஏற்படுத்திய அனந்தி மீதும் வழக்கு

## முன்னாள் மாகாணப் போக்குவரத்து அமைச்சர் டெனீஸ்வரன் அறிவிப்பு

வவுனியா, ஓக. 21

என் மீது ஊழல் குற்றச்சாட்டு சுமத்தி அவதூறு ஏற்படுத்தியமை தொடர்பில் முன்னாள் வடக்கு மாகாண அமைச்சர் அனந்தி சசிதரன் மீதும் வழக்கு தொடரப்படும் என முன்னாள் வடக்கு மாகாண போக்குவரத்து, மீன்பிடி மற்றும் கிராமிய அபிவிருத்தி அமைச்சர் பா.டெனீஸ்வரன் தெரிவித்தார்.



வடக்கு மாகாண முன்னாள் முதலமைச்சருக்கு எதிரான நீதிமன்ற வழக்கு தொடர்பில் ஊடகவியலாளர் எழுப்பிய கேள்விக்கு ஒன்றுக்கு பதில் அளிக்கும்போதே அவர் இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் –

என்னை அமைச்சரவையில் இருந்து நீக்கியமை தொடர்பில் முதலமைச்சருக்கு எதிரான முறைப்பாட்டுக்கு இறுதித் தீர்ப்பு வந்திருக்கிறது. முதலமைச்சரால் விசாரணைக்குழு அமைத்த பின்னர் 2016 ஆம் ஆண்டு டிசெம்பர் 5 ஆம் திகதி தான் என் மீது முதன் முதல் குற்றச்சாட்டு முன்வைக்கப்பட்டது. வெலிஓயாப் பகுதியில் உள்ள சிங்கள குடும்பங்கள் வாழும் பகுதியில் உள்ள குளம் ஒன்றில் மீன்குஞ்சு விடப்பட்டமையில் மோசடி செய்தேன் என்றும், வீதி அபிவிருத்தி நடவடிக்கைளின்போது பஸ் தரிப்பிடம் அமைக்கும் பணிகளில் மோசடி இடம் பெற்றது எனவும், மாவீரர் போராளிகளுக்கான வேலைத்திட்டத்தில் ஊழல் நடந்தது என்றும் மாகாணசபை உறுப்பினர் அனந்தி சசிதரன் குற்றச்சாட்டுக்களை முன்வைத்திருந்தார். ஆனால் நான் அந்த விசாரணைக்கு சென்றிருந்தேன். என் மீது சுமத்தப்பட்ட குற்றச்சாட்டுக்கான அனைத்து பதில்களையும் வழங்கியிருந்தேன்.

ஒவ்வொரு வருடமும் எனது மீன்பிடி அமைச்சுக்கு 3 கோடி தொடக்கம் நிதி ஒதுக்கப்பட்டிருந்தது. அதில் 5 – 6 இலட்சம் ரூபா முல்லைத்தீவு மாவட்டத்தில் இருக்கின்ற சிங்கள கிராமத்துக்கு வழங்கினேன். அவ்வாறு நான் செய்தது பிழை என்பதுதான் முதலாவது குற்றச்சாட்டு. அந்தச் சிங்கள குடும்பங்கள் எமது வடமாகாணத்தில் இருக்கின்ற மக்கள். நான் வடமாகாணத்தில் இருக்கின்ற மூவின மக்களுக்கும் அமைச்சர் தான். அவர்களுக்குச் செய்யக் கூடாது என்று ஒரு மாகாண சபை உறுப்பினர் செய்த முறைப்பாடுதான் அது. எமது மாகாணத்தில் சிறுபான்மையாகச் சிங்கள மக்கள் இருக்கின்ற ஒரு மாவட்டத்தில் ஒரு 100 தொடக்கம் 200 பேர் வரையில் சிங்கள மக்கள் வசிக்கும் நிலையில் அந்த கிராமத்திற்கு நான் உதவி செய்யக் கூடாது எனில், மத்திய அரசு வடக்கு – கிழக்கு மாகாணத்திற்கோ அல்லது தமிழ் மக்களுக்கோ உதவி செய்யவில்லை என்று எப்படி கேட்க முடியும். அப்படிப் பார்த்தால், அவர்கள் எம்மை அடக்கி ஆள்வது சரி.

இதற்கு நான் விசாரணை குழுவில் சரியான விளக்கம் கொடுத்துள்ளேன். அதேபோல் மாவீரர் போராளிகள் குடும்பங்களுக்கும், ஒதுக்கப்பட்ட நிதிகளில் ஒரு ரூபாவாவது நான் எடுத்தேன் என்று நிரூபித்தால் அரசியலில் இருந்து ஒதுக்குகிறேன். வீதி அபிவிருத்தி அதிகார சபைக்கு ஒதுக்கப்பட்ட நிதி அந்த நிதிப் பிரமாணங்களுக்கு அமைய வீதி அபிவிருத்தி அதிகார சபை உத்தியோகத்தர்கள் ஊடாகவே செலவு செய்யப்பட்டது. இவை எல்லாவற்றுக்கும் நான் சரியாகப் பதில் அளித்த பின்னரும் எனக்கு எதிரான பாரதூரமான குற்றச்சாட்டுக்களைக் கொடுத்த உறுப்பினர் அனந்தி சசிதரன் மீது நடவடிக்கை எடுக்கவில்லை. என் மீது விசாரணை இடம்பெற்றபோது யாழ். நூலகத்திற்கு அருகில் உள்ள ஓர் இடத்தில் அனந்தி சசிதரன் நின்றிருந்தார். தான் கொடுத்த ஒரு முறைப்பாட்டுக்கு முகம் கொடுத்து அதனை நிரூபிக்க முடியாத அளவுக்குத் தள்ளப்பட்டு விசாரணை குழு பல தடவைகள் அவருக்கு அறிவித்தல் கொடுத்தும், அவர் விசாரணை குழு முன் தோன்றவில்லை. இவ்வாறு பிழை செய்த ஒருவருக்கு முதலமைச்சர் எடுத்த நடவடிக்கை என்ன?

இந்த நிலையில் அனந்தி சசிதரனுக்கு எதிராகவும் வழக்கு போட இருக்கின்றேன். அவதூறு ஏற்படுத்தியமை தொடர்பில் அந்த வழக்கை தாக்கல் செய்யவுள்ளேன். முடிந்தால் அனந்தி சசிதரன் அந்த வழக்கில் வென்று காட்டட்டும். அனந்தி சசிதரன் செய்த முறைப்பாடு பொய் என்பதை விசாரணை குழு தெரிவித்துள்ளது. அனந்தி சசிதரன் மீது அடுத்த நடவடிக்கை தொடரும் – என்றார். (ஐ – 100)

# மதுபோதையில் சிக்கிக்கொண்ட சாரதிக்கு 77,500 ரூபா தண்டம்

யாழ்ப்பாணம், ஓக. 21

உரிய ஆவணங்கள் இல்லாமல் வாகனம் செலுத்தியமை மற்றும் மதுபோதையில் சாரத்தியம் செய்தமை உள்ளிட்ட குற்றங்களை புரிந்த ஒருவருக்கு 77 ஆயிரத்து 500 ரூபா தண்டம் விதித்து யாழ்ப்பாணம் நீதிவான் நீதிமன்றம் நேற்று முன் தினம் உத்தரவிட்டது.

யாழ்ப்பாணம் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதியில் மதுபோதையில் சாரத்தியம் செய்த குற்றச்சாட்டில் ஒருவர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டார். அவருக்கு எதிராக யாழ்ப்பாணம் நீதிவான் நீதிமன்றில் பொலிஸார் வழக்குத் தாக்கல் செய்தனர்.

மதுபோதையில் சாரத்தியம் செய்தமை மற்றும் சாரதி அனுமதிப்பத்திரம், காப்புறுதிப் பத்திரம், வாகன வரி அனுமதிப்பத்திரம் ஆகியவையின்றி வாகனம் செலுத்தியமை ஆகிய நான்கு குற்றச்சாட்டுக்களை சாரதிக்கு எதிராக பொலிஸார் முன்வைத்தனர்.

வழக்கு நேற்று முன்தினம் யாழ்ப்பாணம் நீதிமன்றில் நீதிவான் ஏ.எஸ்.பீற்றர் போல் முன்னிலையில் விசாரணைக்கு வந்தது. சாரதி குற்றச்சாட்டுக்கள் அனைத்தையும் ஏற்றுக் கொண்டார்.

மதுபோதையில் சாரத்தியம் மற்றும் சாரதி அனுமதிப்பத்திரம், காப்புறுதிப்பத்திரமின்றி வாகனம் செலுத்தியமை ஆகிய 3 குற்றங்களுக்கும் தலா 25 ஆயிரம் ரூபா வீதம் 75 ஆயிரம் ரூபா தண்டமாகவும் வாகன வரி அனுமதிப்பத்திரமின்றி வாகனம் செலுத்தியமைக்கு 2 ஆயிரத்து 500 ரூபாவுமாக மொத்தம் 77 ஆயிரத்து 500 ரூபாவை குற்றவாளி தண்டமாகச் செலுத்தவேண்டும்.

தண்டப்பணத்தில் ஒரு பகுதியான 38 ஆயிரத்து 750 ரூபாவை நேற்று முன்தினமும் மற்றைய பகுதியான 38 ஆயிரத்து 750 ரூபாவை வரும் 23ஆம் திகதியும் செலுத்தி முடிக்கவேண்டும் என்று நீதிவான் உத்தரவிட்டார். (ஐ – 07)

**நாளை** 22.08.2019 வியாழக்கிழமை

நட்சத்திரம்: பரணி பி.இ 12.02 வரை
திதி : ஸப்தமி பி.இ 4.27 வரை
இராகுகாலம் : 1.35 – 3.05
சுப நேரம் : 7.35 – 9.05

காலைக்கதிர்
Kalaikathir



# கைதான மருத்துவர் சிவரூபனை விடுவிக்கக் கோரி ஆர்ப்பாட்டம்!

## பளையில் மக்களால் நேற்று முன்னெடுப்பு



யாழ்ப்பாணம், ஓக. 21

பளை வைத்தியசாலையின் அத்தியட்சகர் மருத்துவர் சின்னையா சிவரூபன் பயங்கரவாத விசாரணைப் பிரிவினரால் கைது செய்யப்பட்டுள்ளமைக்கு எதிர்ப்பு தெரிவித்தும் அவரை உடன் விடுவிக்கக் கோரியும் மக்கள் போராட்டம் நேற்று முன்னெடுக்கப்பட்டது.

பயங்கரவாதச் செயற்பாடுகளுடன் தொடர்புடைய குற்றச்சாட்டில் மருத்துவர் சின்னையா சிவரூபன் கடந்த ஞாயிற்றுக்கிழமை இரவு கைது செய்யப்பட்டார்.

இந்நிலையில், பளை வைத்தியசாலை மருத்துவ அதிகாரியின் விடுதலையை வலியுறுத்தியும், பதில் மருத்துவரை நியமிக்க கோரியும் மக்கள் போராட்டம் நேற்றுக் காலை முன்னெடுக்கப்பட்டது.

இந்தப் போராட்டம் பளை வைத்தியசாலை முன்பாக இடம்பெற்றது. (ஐ - 07)



# அமெ. நிகழ்ச்சிநிரல்படியே ஈஸ்டர் குண்டுத் தாக்குதல்!

## விமல் வீரவன்ஸ கண்டுபிடிப்பு

கொழும்பு, ஓக. 21

ஈஸ்டர் ஞாயிறு குண்டு தாக்குதல் அமெரிக்காவின் நிகழ்ச்சி நிரலுக்கு அமைய நடத்தப்பட்டதாக நாடாளுமன்ற உறுப்பினர் விமல் வீரவன்ஸ தெரிவித்துள்ளார்.

ஹொக்கந்தர பகுதியில் இடம்பெற்ற நிகழ்வு ஒன்றிலேயே அவர் இதனைக் கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்–

தற்கொலைதாரி சஹ்ரான் திடீரென உருவாகியமைக்கு என்ன காரணம்? அவருக்கு அதுவரை எந்தவொரு கோரிக்கையும் இருக்கவில்லை. தாக்குதலுக்கான உரிமையை ஐ.எஸ் பயங்கரவாதிகள் ஏற்ற போதிலும் அவர்கள் தாக்குதல் நடத்தப்பட்டமைக்கான காரணத்தைத் தெரிவிக்கவில்லை.



சஹ்ரான் போன்ற தீவிரவாதிகள் 2015 ஜனவரி 8 ஆம் திகதி மைத்திரிபால சிறிசேனவுக்காக வேலை செய்தனர். சஹ்ரான் உள்ளிட்டவர்கள் ஐக்கிய தேசியக் கட்சியை ஆட்சிக்கு கொண்டுவர செயற்பட்டதாகச் சாய்ந்தமருது மக்கள் நாடாளுமன்றத் தெரிவுக்குழுவில் கூறினர்.

2017 ஆம் ஆண்டில் குண்டு தயாரிப்பிற்கான பொருள்களை நாட்டுக்குக் கொண்டு வந்ததுடன் அப்போது அவர்களுக்கு எதிராகப் பொலிஸார் செயற்படவில்லை. அவசர தருணங்களில் ஆட்சியைக் காப்பாற்றும் சக்தியாக சஹ்ரானை பாவித்தனர்.

சஹ்ரான் பின்னால் மேற்குலக நாடுகள் இருந்தன. அவர்களே ரணில் விக்கிரமசிங்க என்ற பொம்மையைப் பிரதமராக்கினர். அவர்கள் அதனூடாக நாட்டைக் கைப்பற்ற முனைகின்றனர். நாட்டில் உள்ள பல இடங்களைக் கையகப்படுத்தும் நோக்கில் அமெரிக்கா விசேட காணிச்சட்டத்தைக் கொண்டுவர உதவியது– என்றார்.

# வெலிக்கடை சிறை ஊடாக பறந்தது ட்ரோன் கமெரா!

கொழும்பு, ஓக. 21

வெலிக்கடைசிறைச்சாலை ஊடாக நேற்று முன்தினம் இரவு ட்ரோன் கமெரா ஒன்று பறந்து சென்றுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

நேற்று முன் தினம் இரவு 8 மணி தொடக்கம் 8.15 மணிக்கிடையில் இந்த கமெரா பறந்துள்ளதாகவும், இந்த விடயம் தொடர்பில், சிறைச்சாலை அதிகாரிகள், சிறைச்சாலைகள் பணிப்பாளருக்கு அறிவுறுத்தியுள்ளனர் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது

இதனையடுத்து, இந்த ட்ரோன் கமெரா தொடர்பில் அவதானமாக இருக்குமாறு அதிகாரிகளுக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளதாகவும், சிறைச்சாலை வளாகத்துக்குள் இவ்வாறான ட்ரோன் கமெராக்களை கண்டால் சுட்டு வீழ்த்துமாறும் பணிப்பாளர் சிறைச்சாலை அதிகாரிகளுக்கு உத்தரவிட்டுள்ளார் என்றும் தெரிவிக்கப்படுகின்றது. (ஐ)

# பிறந்த சிசுவைக் குளத்தில் வீசிவிட்டு தப்பினார் தாய்

## பொலிஸார் வலைவீச்சு



முல்லைத்தீவு, ஓக. 21

முல்லைத்தீவு மாவட்டம் மாந்தை கிழக்கு பூவரசங்குளம் பகுதியில் பிறந்த குழந்தை ஒன்றின் சடலம் பொலிஸாரால் நேற்று முன் தினம் மீட்கப்பட்டது.

குளத்தின் கரைப்பகுதியில் குழந்தையைப் பிரசவித்த பெண் சிசுவை அங்கு வீசிவிட்டு தப்பிச் சென்றுள்ளார்.

இந்தச் சம்பவம் குறித்து சம்பவ இடத்துக்குச் சென்ற மல்லாவி பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ஐ)

### வவுனியா, வேப்பங்குளம் ஸ்ரீபத்திரகாளி ஆலயத்தில் இருந்து

# நல்லூர் கந்தன் திருத்தலம் நோக்கி வேல் தாங்கிய நடை பாத யாத்திரை

## வெள்ளிக்கிழமை அங்கிருந்து ஆரம்பமாகிறது

வவுனியா, ஓக.21

வவுனியா வேப்பங்குளம் அருள்மிகு ஸ்ரீ பத்திரகாளி அம்பாள் ஆலயத்தில் இருந்து நல்லைக் கந்தன் திருத்தலத்திற்கான ஒன்பதாவது வருட வேல் தாங்கிய நடை பாத யாததிரை நாளைமறுதினம் 23 ஆம் திகதி வெள்ளிக்கிழமை இங்கிருந்து ஆரம்பமாகிறது.

நாளைமறுதினம் 23 ஆம் திகதி ஆரம்பமாகும் இந்தப் பாத யாத்திரை தொடர்ந்து 28 ஆம் திகதி புதன்கிழமை வரை–வழி நெடுகிலும் உள்ள 121 ஆலயங்களில் பூசை வழிபாடுகளில் அடியார்கள் ஈடு பட்டு 29 ஆம் திகதி தேர்த் திருவிழா அன்று நல்லூர் கந்தன் ஆலயத் தைச் சென்றடையும்.

தொடர்ச்சியாக 6 நாள்களும் செல்லும்வழியில் உள்ள ஆலயங்களில்–குறிப்பிட்ட இடங்களில்–இரவு வேளை தங்கி, ஒழுங்கு செய்யப்பட்ட ஆலயங்களில் இரவு உணவு, இரவு தங்கலுடன் மறுநாள் காலை வழிபாடுகளுடன் யாத்திரை தொடரும்.



இந்தச் சிறப்புமிகு வேல் தாங்கிய நடை பாத யாத்திரையின் 122 ஆவது பூர்த்தி ஆலயமாக நல்லூர்க் கந்தன் தேவஸ்தானம் அமையும்– –23 ஆம் திகதி நடை பாத யாத்திரை ஆரம்பிப்பதால், அடியார்கள் அதற்கு முதல் நாள் 22 ஆம் திகா மாலையே வேப்பங்குளம் ஸ்ரீ பத்திரகாளி அம்மன் ஆலயத்துக்கு வருகை தந்து யாத்திரையில் கலந்து கொள்ளுமாறும் –

மேலும் தகவல்களை அறிந்து கொள்ள 077 6143628, 077 54 68273 ஆகிய தொலைபேசி எண்களுடன் தொடர்பு கொள்ளலாம் என்று ஆலய நிர்வாகி அறநெறிச் செவ்வி கு.ஜெயராணி (சாமி அம்மா)யும் ஆலய தொண்டர்களும் கேட்டுக் கொண்டுள்ளனர். (இ)

# மகேஷ் சேனாநாயக்க ஜெனரலாக தரமுயர்வு

கொழும்பு, ஓக. 21

முன்னாள் இராணுவத் தளபதி லெப்டினன்ட் ஜெனரல் மகேஷ் சேனாநாயக்க, ஜெனரலாகத் தரமுயர்த்தப்பட்டுள்ளார். ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவால் அவருக்கு இந்த தரமுயர்வு வழங் கப்பட்டுள்ளது. (ஐ)

# ஐ.தே.க. எம்.பிக்களுடன் இன்று பேசுகிறார் ரணில்!

கொழும்பு, ஓக. 21

ஐக்கிய தேசியக் கட்சியின் 55 நாடாளுமன்ற உறுப்பினர்கள் முன்வைத்த கோரிக்கை தொடர்பாக, கட்சியின் சிரேஷ்ட உறுப்பினர்களுடன் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க இன்று கலந்துரையாடவுள்ளார்.

அலரி மாளிகையில் நேற்று முன் தினம் இடம்பெற்ற ஆளும் கட்சி விசேட நாடாளுமன்ற குழுக்கூட்டத்தில் கலந்து கொண்ட அமைச்சர் ஹர்ச டி சில்வா இந்தத் தகவலை வெளியிட்டுள்ளார்.

ஐக்கிய தேசியக் கட்சியின் ஜனாதிபதி வேட்பாளர் ஒருவரை தெரிவு செய்வதற்காக 7 நாள்களுக்குள் நாடாளுமன்றக் குழு மற்றும் செயற்குழுக் கூட்டங்களை ஒரே நேரத்தில் நடத்துமாறு ஐ.தே.க.வின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் கோரிக்கை விடுத்திருந்தனர்.

அத்தோடு இந்தக் கோரிக்கையை முன்வைத்து 55 நாடாளுமன்ற உறுப்பினர்கள் கையொப்பமிட்ட கடிதம் நேற்று முன் தினம் பிரதமரிடம் கையளிக்கப்பட்டது. இந்த விடயம் தொடர்பாக சிரேஷ்ட உறுப்பினர்களுடன் கலந்துரையாடுவதற்குப் பிரதமர் உறுதியளித்தார் என அமைச்சர் ஹர்ச டி சில்வா தெரிவித்துள்ளார்.

# நல்லூர் ஆலய சூழலில் இன்று

யாழ்ப்பாணம், ஓக.21

இலங்கை இளங்கலைஞர் மன்றம் நல்லூர் முருகன் உற்சவத்தையொட்டி நல்லூர் துர்க்கா தேவி மணி மண்டபத்தில் நடத்தும் தெய்வீக இசையரங்கில் –

இன்று புதன்கிழமை மாலை 6.45 மணி முதல் 7.15 வரை **வயலின் இசை** வயலின் – வனஜா ஈஸ்வரசர்மா, மிருதங்கம் – ந.சதீஸ்குமார், கெஞ்சிரா – ச.ஜெனில்சங்கர்.

7.15 முதல் 8.15 வரை **இசைக்கச்சேரி** பாட்டு – ஜெகதீஸ்வரன் மதுசிகன், வயலின் – அஜெயராமன் மிருதங்கம் – ஞா.வசந், கெஞ்சிரா – க.இசைநிலவன்.

# இந்திய, பாக். தலைவர்களுடன் தொலைபேசியில் காஷ்மீர் பிரச்சினை குறித்து அதிபர் டிரம்ப் பேச்சு!



## கடுமையான சூழல் நிலவுவதாக அவர் கருத்து

**வொஷிங்டன்,ஒக21**

**இந்தியா–பாகிஸ்தான் ஆகிய இரு நாட்டு பிரதமர்களிடமும் தொலைபேசியில் பேசிய அமெரிக்க அதிபர் டிரம்ப், காஷ்மீரில் கடுமையான சூழல் நிலவுவதாக தனது டுவிட்டர் பக்கத்தில் பதிவிட்டுள்ளார்.**

**ஜம்மு காஷ்மீர் மாநிலம் லடாக் மற்றும் ஜம்மு காஷ்மீர் என இரு யூனியன் பிரதேசங்களாகப் பிரிக்கப்படும் என அறிவிக்கப்பட்டது. மேலும் காஷ்மீருக்கான சிறப்பு அந்தஸ்தும் ரத்து செய்யப்பட்டது. இதற்கு நாடு முழுவதும் எதிர்ப்பும், ஆதரவும் தொடர்ந்து எழுந்து வருகின்றன.**

இதற்கு பாகிஸ்தான், சீனா உள்ளிட்ட நாடுகள் கடும் கண்டனத்தைத் தெரிவித்தன. இந்நிலையில் இது குறித்து அமெரிக்க அதிபர் டிரம்ப் தனது டுவிட்டர் பக்கத்தில் அதிரடியாக ட்விட் ஒன்றை பதிவிட்டுள்ளார்.

இதில், 'எனது நல்ல நண்பர்களான இந்தியபிரதமர்மோடிமற்றும்பாகிஸ்தான் பிரதமர் இம்ரான் கான் ஆகிய இருவரிடமும் பேசினேன். வர்த்தகம், கூட்டாண்மை குறித்தும், முக்கியமாக காஷ்மீரில் நிலவும் பதற்றமான சூழலை குறைக்க இந்தியா-பாகிஸ்தான் இணைந்து செயல்படுவது குறித்தும் பேசினேன்.

சூழலோ கடுமையானதுதான். ஆனால், நல்ல முறையில் உரையாடல் நிகழ்ந்து முடிந்தது' எனப் பதிவிட்டுள்ளார்.

இது குறித்து நியூயோர்க்கைச் சேர்ந்த இந்திய-அமெரிக்க வழக்கறிஞர் ரவி பத்ரா கூறுகையில், 'அமெரிக்க அதிபர் டிரம்ப், அமெரிக்க மக்களுக்காகவும், நம் துணை கண்டத்தில் வசிக்கும் நண்பர்களாக திகழும் மக்களுக்காகவும் இரு நாட்டு பிரதமர்களிடமும் பேசினார். பயங்கரவாதம் அற்ற, சட்டம் மற்றும் ஒழுங்கிற்கு உட்பட்டு குடிமக்களுடன் இணைந்து நல்ல வருங்காலத்தை உருவாக்க வேண்டும் எனும் எண்ணத்துடனே பேசினார். பேச்சு சுதந்திரமாக இருக்கும்போது, ஒருவரின் வெறுப்பு கலந்த பேச்சானது உள்நாட்டு அமைதியை கலைப்பதாகவும், கிளர்ச்சியை ஏற்படுத்துவதுமாக இருக்கிறது. பேச்சு அவ்விதத்தில் இருக்கக் கூடாது.

பிரதமர் மோடி, காஷ்மீரில் இருதரப்பு பேச்சு நடத்த பாகிஸ்தான் பிரதமர் இம்ரான் கானுக்கு அழைப்பு விடுக்க வேண்டும். இது அழைப்பிற்கான நேரம்' என கூறியுள்ளார்.

இதற்கிடையே, தொலைபேசி உரையாடல் 30 நிமிடங்கள் நடந்ததாகவும், அப்போது பேசிய பிரதமர் மோடி, பாகிஸ்தான் பிரதமர் இம்ரான் கான் நாட்டின் அமைதியை குலைக்கும் வகையில் நடந்து கொள்கிறார் என அதிபர் டிரம்பிடம் குற்றம் சாட்டினார் எனவும் தகவல் வெளியாகியுள்ளது குறிப்பிடத்தக்கது.

# கர்நாடக முதல்வராக எடியூரப்பா பதவியேற்று 25 நாள்களின் பின்னரே புதிய அமைச்சரவை!

## நேற்று பெங்களூருவில் பொறுப்பேற்றுக் கொண்டது

பெங்களூரு:,ஒக.21

கர்நாடக முதலமைச்சர் எடியூரப்பா நேற்றுத் தனது அமைச்சரவையை விரிவாக்கம் செய்துள்ளார். அமைச்சரவையில் புதிதாக 17 அமைச்சர்கள் இணைந்துள்ளனர்.

கர்நாடகத்தில் குமாரசாமி தலைமையில் காங்கிரஸ்– ஜனதா தளம்(எஸ்) கட்சிகளின் கூட்டணி ஆட்சி நடந்தது. அக்கட்சிகளை சேர்ந்த 15 எம்.எல்.ஏ.க்கள் ராஜினாமா செய்தனர். இதனால் குமாரசாமி அரசு பெரும்பான்மையை இழந்து கவிழ்ந்தது. குமாரசாமி முதலமைச்சர் பதவியை ராஜினாமா செய்தார்.

அதனைத் தொடர்ந்து கடந்த மாதம் (ஜூலை) 26 ஆம் திகதி கர்நாடக பா.ஜனதா தலைவர் எடியூரப்பா முதல் மந்திரியாகப் பதவி ஏற்றார். காஷ்மீர் விவகாரம், கர்நாடகத்தில் ஏற்பட்ட வெள்ளப் பாதிப்பு போன்ற காரணங்களால் மந்திரிசபை விரிவாக்கம் தள்ளிப்போனது.

இந்த நிலையில் புதிய அரசு அமைந்ததில் இருந்து தனி ஆளாக நிர்வாகத்தை கவனித்து வந்த எடியூரப்பா, 25 நாள்களுக்குப் பிறகு தனது அமைச்சரவையை நேற்று விரிவாக்கம் செய்துள்ளார். முதற்கட்டமாக 17 பேர் அமைச்சரவையில் சேர்க்கப்பட்டுள்ளனர். ஆளுநர் மாளிகையில் அமைச்சர்கள் பதவி ஏற்பு விழா நடைபெற்றது. புதிய அமைச்சர்களுக்கு ஆளுநர் வஜுபாய் வாலா பதவிப்பிரமாணமும், இரகசியக் காப்புப் பிரமாணமும் செய்து வைத்தார்.



ஈஸ்வரப்பா, ஜெகதீஷ்ஷெட்டர், ஆர்.அசோகா, கோவிந்த மக்தப்பா கரஜோல், டாக்டர் அஷ்வத் நாராயணா, லக்ஷ்மண் சங்கப்பா சவாதி, பி.ஸ்ரீராமுலு, சுரேஷ் குமார், சோமண்ணா, சி.டி.ரவி, பசவராஜ் பொம்மை, கோட்டா சீனிவாஸ் பூஜாரி, மது சுவாமி, சந்திரகாந்த கவுடா, எச். நாகேஷ் (சுயேச்சை எம்.எல்.ஏ.), பிரபு சவுகான், சசிகலா ஜோலே ஆகியோர் அமைச்சர்களாகப் பதவியேற்றனர்.

சட்டப்படி கர்நாடக அமைச்சரவையில் முதலமைச்சர் உட்பட 34 பேர் இடம் பெற முடியும். இப்போது முதலமைச்சர் உட்பட 18 பேர் அமைச்சரவையில் இடம்பெற்றிருக்கின்றமையால், மீதம் 16 இடங்கள் காலியாக உள்ளன.

# உலகில் தங்கம் இருப்புப் பட்டியலில் ஒன்பதாவது இடத்தில் இந்தியாவாம்



தங்கம் அதிகமாக இருப்பு வைத்துள்ள நாடுகளின் பட்டியலில் இந்தியா 9ஆவது இடத்துக்கு முன்னேறியுள்ளது.

உலக அளவில் இன்று தங்கத்துக்கு கடும் கிராக்கி ஏற்பட்டு உள்ளது. இதனால் அதன் விலையும் கடுமையான ஏற்றத்தை கண்டிருக்கிறது. தங்கத்தை வாங்குவதில் பொதுமக்கள் மட்டுமின்றி பல வேறு நாடுகளும் அதீத ஆர்வம் காட்டி வருகின்றன. ஏனென்றால் ஒரு நாட்டின் பொருளாதார ஸ்திரத்தன்மையை தங்கமே நிர்ணயிக்கிறது.

தங்கள் நாட்டின் தலைமை வங்கியில் (இந்தியாவில் ரிசர்வ் வங்கி) உள்ள தங்கத்தின் இருப்புக்கு ஏற்பவே எல்லா நாடுகளும் பணத்தை புழக்கத்தில் விடுகின்றன. இதனால் தங்கத்தை இருப்பு வைத்துக்கொள்வதில் நாடுகளுக்கு இடையே போட்டி ஏற்படுகிறது.

உலக அளவில் இன்று தங்கத்தை அதிகமாக இருப்பு வைத்துள்ள நாடு அமெரிக்கா ஆகும். உலக தங்க கவுன்ஸில் சமீபத்தில் வெளியிட்ட உத்தேச மதிப்பு பட்டியலின்படி அமெரிக்கா 8133.5 தொன் தங்கத்தை இருப்பு வைத்துள்ளது. இதற்கு அடுத்த படியாக ஜேர்மனிதான் அதிக அளவு தங்கத்தை வைத்துள்ளது. ஜேர்மனி நாட்டின் தங்க இருப்பு 3367.8 தொன்.

அந்த நாடுகளை தொடர்ந்து இத்தாலி 2451.8 தொன், பிரான்ஸ் 2436.1 தொன், ரஷியா 2207 தொன், சீனா 1926.5 தொன், சுவிற்சர்லாந்து 1040 தொன், ஜப்பான் 765.2 தொன், இந்தியா 618.2 தொன், நெதர்லாந்து 612.5 தொன் தங்கம் இருப்பு வைத்துள்ளன.

தங்கம் இருப்பு பட்டியலில் இந்தியா இதற்கு முன்பு 10 ஆவது இடத்தில் இருந்தது. தற்போது 9 ஆவது இடத்துக்கு முன்னேறி இருப்பது குறிப்பிடத்தக்கது.

# நிலவைச் சுற்றிவரும் வட்டப்பாதைக்குள் வெற்றிகரமாக நுழைந்தது சந்திரயான்-2



பெங்களூரு,ஒக்.21

இந்தியாவின் இஸ்ரோ அனுப்பிய 'சந்திரயான்-2' விண்கலம் 28 நாள் பயணத்திற்குப் பிறகு நிலவின் வட்டப் பாதைக்குள் நேற்று வெற்றிகரமாக நுழைந்தது.

நிலவை பற்றி ஆய்வு செய்வதற்காக சென்னையை அடுத்த ஸ்ரீஹரிகோட்டாவில் இருந்து 3,850 கிலோ எடை கொண்ட சந்திரயான்-2 விண்கலம் ஜி.எஸ்.எல்.வி. மார்க்-3 ரொக்கெட் மூலம் கடந்த மாதம் 22 ஆம் திகதி வெற்றிகரமாக விண்ணில் செலுத்தப்பட்டது.

புறப்பட்ட 16 நிமிடம் 24 வினாடிகளில் விண்கலத்தை ரொக்கெட் குறிப்பிட்ட இலக்கில் கொண்டு போய்ச் சேர்த்து, புவி வட்டப்பாதையில் நிலைநிறுத்தியது.

பின்னர் பூமியை சுற்றி வந்த சந்திரயான்-2 விண்கலத்தின் சுற்றுவட்டப் பாதை படிப்படியாக அதிகரிக்கப்பட்டு, கடந்த 14ஆம் திகதி அது நிலவை நோக்கி வெற்றிகரமாகத் திசை மாற்றப்பட்டது.



நிலவை நோக்கிப் பயணிக்கத் தொடங்கிய சந்திரயான்-2 விண்கலத்தை நேற்று நிலவின் சுற்றுவட்டப்பாதையில் சேர்க்கத் திட்டமிடப்பட்டது. அதன்படி சந்திரயானின் திரவ என்ஜின் நேற்றுக் காலை 8.30 மணி முதல் 9.30 மணி வரை ஒரு மணி நேரம் இயக்கப்பட்டது.

இதனால் நிலவை நோக்கி சீறிப் பாய்ந்த சந்திரயான்-2, நிலவின் வட்டப்பாதையில் வெற்றிகரமாக நுழைந்து நிலவை சுற்றி வருகிறது. இந்த முக்கியமான செயல்பாடு வெற்றிகரமாக அமைந்ததால் இஸ்ரோ விஞ்ஞானிகள் மகிழ்ச்சி அடைந்தனர்.

28 நாள்கள் பயணத்திற்குப் பிறகு சந்திரயான்-2 தற்போது நிலவை நீள் வட்டப் பாதையில் சுற்றி வருகிறது. இந்த விண்கலத்தில் இருந்து விக்ரம் 'லாண்டர்' செப்டம்பர் 2 ஆம் திகதி பிரியும். அந்த லாண்டரின் சுற்றுப்பாதையானது இரண்டு முறை மாற்றியமைக்கப்பட்டு அதன் வேகம் படிப்படியாக குறைக்கப்படும். பின்னர் செப்ரெம்பர் 7 ஆம் திகதி லாண்டரை நிலவில் மெதுவாக தரையிறக்குவதற்கான பணிகளை இஸ்ரோ மேற்கொண்டு வருகிறது.

# ஹொங்கொங் போராட்டத்தை அடக்க வன்முறையை சீனா நாடுமானால் அமெரிக்க வர்த்தக பேச்சு முறியும்!

## இப்படி எச்சரிக்கின்றார் அதிபர் டொனால்ட் டிரம்ப்



வொஷிங்டன்,ஓக.21

ஹொங்கொங் போராட்டத்தைத் தொடர்ந்து சீனாவுக்கு அமெரிக்கா ஜனாதிபதி டிரம்ப் கடும் எச்சரிக்கை விடுத்துள்ளார்.

சீனாவில் கடந்த 1989 ஆம் ஆண்டு ஜனநாயக ஆட்சிக்கோரி மக்கள் போராட்டத்தில் குதித்தனர். சீனப் பொதுவுடமைக் கட்சியின் பொருளாதாரக் கொள்கைகளுக்கும் அரசியல் கொள்கைகளுக்கும் எதிராக மாபெரும் போராட்டம் வெடித்தது.

தலைநகர் பீஜிங்கில் உள்ள தியானன்மென் சதுக்கத்தில் மாணவர்கள் மற்றும் தொழிலாளர்கள் உள்பட ஆயிரக்கணக்கானோர் ஒன்று திரண்டு போராட்டம் நடத்தினர். ஏப்ரல் மாதம் 15 ஆம் திகதி தொடங்கிய போராட்டம் ஜூன் மாதம் வரை நீடித்தது.

அப்போதைய சீன அரசு இந்த போராட்டத்தை இரும்பு கரம் கொண்டு ஒடுக்கியது. ஜூன் மாதம் 4 ஆம் திகதி தியானன்மென் சதுக்கத்தில் இராணுவப் படைகள் குவிக்கப்பட்டு போராட்டக்காரர்கள் சுற்றி வளைக்கப்பட்டனர்.

அதன் பின்னர் குருவியை சுடுவது போல் போராட்டக்காரர்கள் அனைவரையும் சுட்டு வீழ்த்தினர். சீன இராணுவம் நிகழ்த்திய இந்தப் படுகொலையில் சுமார் 3 ஆயிரம் பேர் கொல்லப்பட்டனர் என நம்பப்படுகிறது. தியானன்மென் சம்பவம் இன்றும் சீன மக்களின் மனதில் ஆறாத வடுவாக இருக்கிறது.

இந்தச் சூழலில் ஹொங்கொங்கில் கைதிகள் பரிமாற்ற சட்ட திருத்த பிரேரணைக்கு எதிராகக் கடந்த 2 மாதங்களாக நடந்து வரும் போராட்டம் தியானன்மென் படுகொலை போன்ற மீண்டும் ஒரு சம்பவத்துக்கு வழிவகுக்குமோ என்ற அச்சம் எழுந்துள்ளது.

ஹொங்கொங் போராட்டக்காரர்களை எச்சரிக்கும் விதமாக கடந்த வாரம் சீனாவின் அரசு நாளிதழில் தியானன்மென் சம்பவத்தை மறைமுகமாக குறிப்பிட்டு அதை மீண்டும் செய்யவைத்து விடாதீர்கள். சீனா அப்போது இருந்ததை விட பலமாகவும், முதிர்ச்சியுடனும் இருக்கிறது. சிக்கலான சூழ்நிலைகளை நிர்வகிக்கும் திறன் பெரிதும் மேம்படுத்தப்பட்டுள்ளது எனச்செய்தி வெளியிட்டது.

அத்துடன் ஹொங்கொங்கின் எல்லைப் பகுதியில் சீனா இராணுவப் படைகளைக் குவித்து வருகிறது. சீனாவின் இந்தப் போக்கு சர்வதேச அளவில் அச்சத்தையும், கவலையையும் ஏற்படுத்தி உள்ளது.

இந்த நிலையில் ஹொங்கொங் ஜனநாயக ஆதரவுப் போராட்டத்தை சீனா, தியானன்மென் படுகொலைப் பாணியில் ஒடுக்க முற்பட்டால் அது அமெரிக்கா–சீனா இடையிலான வர்த்தகப் பேச்சுக்குத் தீங்கு விளைவிக்கும் என அமெரிக்க ஜனாதிபதி டிரம்ப் எச்சரித்துள்ளார்.

நியூஜெர்சி மாகாணத்தில் நடந்த பத்திரிகையாளர்கள் சந்திப்பின் போது, ஹொங்கொங் போராட்டத்தில் அமெரிக்காவின் நிலைப்பாடு குறித்து டிரம்பிடம் நிருபர்கள் கேள்வி எழுப்பினர். அதற்கு அவர் பதில் அளித்து பேசியதாவது:–

அவர்கள் (சீனா) வன்முறை செய்தால் அதை சமாளிப்பது மிகவும் கடினம் என்று நான் நினைக்கிறேன். அதாவது, அது மற்றொரு தியானன்மென் படுகொலையாக மாறும். சீனா அதைச் செய்ய முற்பட்டால் அமெரிக்கா–சீனா இடையிலான வர்த்தகப் பேச்சு பாதிப்படையும்.

இந்தப் பிரச்சினைக்கான தீர்வுக்கு மனிதாபிமான ரீதியில் செயல்படுவதைக் காண நான் விரும்புகிறேன். அத்துடன் அதிருப்தியாளர்களுடன் பேச்சு நடத்த சீன அதிபர் ஜின்பிங்குக்கு நான் அழைப்பு விடுக்கிறேன். – இவ்வாறு அவர் கூறினார்.

உலகின் இரு பெரும் பொருளாதார நாடுகளான அமெரிக்கா மற்றும் சீனா இடையே ஓராண்டுக்கும் மேலாக வர்த்தகப்போர் நீடிக்கிறது. இதற்கு நிரந்தர தீர்வுகாண இருநாடுகளுக்கும் இடையே வர்த்தக பேச்சு நடந்து வருவது குறிப்பிடத்தக்கது.

# வைத்தியசாலையில் சக நோயாளர்கள் 4பேரை அடித்துக் கொலை செய்த நபர்

## 9 பேர் படுகாயம்; ருமேனியாவில் அதிர்ச்சிச் சம்பவம்



புக்கரெஸ்ட்,ஓக.21

ருமேனியாவில் மருத்துவமனை ஒன்றில் 4 பேர் அடித்துக்கொல்லப்பட்டனர்.

ஐரோப்பிய நாடுகளில் ஒன்றான ருமேனியாவின் கிழக்கு பகுதியில் உள்ள சபாகோ நகரில் தனியாருக்கு சொந்தமான மனநல மருத்துவமனை இயங்கி வருகிறது. கடந்த 15 ஆம் திகதி 38 வயதான நபர் ஒருவர் போதைப்பொருள் பழக்கத்தில் இருந்து மீள்வதற்காக அவராகவே சிகிச்சைக்கு வந்தார். மன நலம் பாதிக்கப்பட்டிருந்த முதியவர்கள் அனுமதிக்கப்பட்டிருந்த அறையில் இந்த நபர் சேர்க்கப்பட்டு சிகிச்சை பெற்று வந்தார்.

இந்த நிலையில் ஞாயிறு மாலை அந்த நபர் திடீரென மருத்துவமனையில் ரகளையில் ஈடுபட்டார். ஒரு கட்டத்தில் அவர் நோயாளிகளுக்கு குளுக்கோஸ் ஏற்ற பயன்படுத்தப்படும் நீளமான கம்பியை எடுத்து சக நோயாளிகளை சரமாரியாகத் தாக்கினார்.

இதில் 60 வயதுக்கு மேற்பட்ட 4 நோயாளிகளின் மண்டை உடைந்து, படுக்கையில் இருந்தபடியே துடிதுடித்து இறந்தனர். மேலும் 9 பேர் பலத்த காயம் அடைந்தனர். அவர்களில் 2 பேர் கோமா நிலைக்கு சென்றனர் எனவும், மற்ற 7 பேரும் உயிருக்கு ஆபத்தான நிலையில் சிகிச்சை பெற்று வருகின்றனர் எனவும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இதற்கிடையில், நோயாளிகளை கொலை செய்து விட்டுதப்பி ஓடிய நபரை சில மணி நேரத்தில் பொலிஸார் கைது செய்தனர். அவரிடம் சம்பவம் குறித்து தீவிர விசாரணை நடத்தி வருகின்றனர்.

# லாவோஸில் சுற்றுலா பஸ் விபத்தில் 13 பேர் உயிரிழப்பு; 31 பேர் காயம்!



வியன்டியானே,ஓக.21

லாவோஸ் நாட்டில் சுற்றுலா பஸ் ஒன்று பாதையை விட்டு விலகி அடர்ந்த காட்டுப் பள்ளத்துக்குள் பாய்ந்து விபத்துக்குள்ளானதில் 13 பேர் பலியாகி உள்ளனர்.

லாவோஸ் நாட்டின் வியன்டியானே நகருக்கும், லுவாங் பிரபாங் நகருக்கும் இடையே சென்று கொண்டிருந்த சுற்றுலா பஸ் ஒன்று சாலையில் திடீரென கவிழ்ந்து விபத்திற்குள்ளானது.

இதில், 13 பேர் பலியாகியுள்ளனர். 31 பேர் காயமடைந்து உள்ளனர். இன்னும் இரண்டு பேரைக் காணவில்லை.

இந்த பஸ்ஸில் சீனாவை சேர்ந்த 43 பேர் பயணம் செய்துள்ளனர். அவர்களுடன் சீன சுற்றுலா உதவியாளர் ஒருவர் மற்றும் லாவோஸ் நாட்டை சேர்ந்த சாரதி மற்றும் சுற்றுலா வழிகாட்டி ஆகிய 2 பேரும் பயணித்துள்ளனர்.

பஸ்ஸின் பிரேக் திடீரெனப் பிடிக்கவில்லை என்றும் அதனால் இந்த விபத்து நடந்துள்ளது என்றும் பொலிஸார் கூறுகின்றனர். இதுவரை 13 சடலங்கள் மீட்கப்பட்டு உள்ளன.

இந்தச் சம்பவம் பற்றி அறிந்து லாவோஸ் நாட்டில் உள்ள சீனத் தூதரக ஊழியர்கள் மற்றும் லுவாங் பிரபாங்கில் உள்ள சீனத் தூதர் விபத்து பகுதிக்குச் சென்றனர்.





## அடுத்த ஜனாதிபதித் தேர்தல்:

# தமிழ் வாக்காளர்கள் திரிசங்கு நிலையில்!

பொதுஜன பெரமுனவின் வேட்பாளராக கோட்டாபய அறிவிக்கப்பட்டிருக்கிறார். பொதுஜனபெரமுன எனப்படுவது யுத்த வெற்றியின் குழந்தை. யுத்த வெற்றியை நிறுவன மயப்படுத்தி அதைக் கட்டிறுக்கமான ஒரு கட்சியாக மஹிந்த கட்டி எழுப்பியுள்ளார்.

மஹிந்த ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் பாரம்பரியத்தில் வந்தவர். ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியைக் கட்டி எழுப்பியதில் ராஜபக்ஷாக்களுக்கு பெரிய பங்கு உண்டு. எனினும் சந்திரிகாவின் கண்டிச் சிங்கள மேட்டுக்குடி வம்சத்துக்கு நிகராக நின்று பிடிப்பதில் ராஜபக்ஷக்களுக்கு அடிப்படையான சவால்கள் முன்பு இருந்தன.

ஆனால் யுத்த வெற்றியின் மூலம் தனக்கு முன்பு ஆட்சி செய்த மேட்டுக்குடி கண்டி சிங்கள வம்சங்கள் எதனாலும் முடியாத ஒன்றை ராஜபக்ஷ சாதித்துக் காட்டினார். வெல்ல முடியாத ஓர் அமைப்பு என்று நம்பப்பட்ட புலிகள் இயக்கத்தை அவர் தோற்கடித்தார். அதன்மூலம் தனக்கு முன்பு ஆட்சி செய்த கண்டிச் சிங்கள மேட்டுக்குடிகளுக்கு எதிராகத் தன்னை தோற்கடிக்கப்பட முடியாத ஒருவராக ஸ்தாபித்தார்.

பண்டாரநாயக்காக்களின் கட்சியாகக் காணப்பட்ட ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சிக்குள் தனது முதன்மையை ஸ்தாபிப்பதை விடவும் தனது யுத்த வெற்றிகளையே ஒரு கட்சியாகக் கட்டியெழுப்புவது என்று அவர் முடிவெடுத்தார். அப்படி முடிவெடுத்துக் கட்டி எழுப்பப்பட்டதே தாமரை மொட்டுக் கட்சியான பொதுஜன பெரமுன.

கடந்த உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் இக்கட்சி 50 லட்சம் வாக்குகளைப் பெற்றது. ஆசியாவிலேயே சீனக் கொம்யூனிஸ்ட் கட்சிக்கு அடுத்த படியாக இரண்டாவது பெரிய கட்சி அது வென்றும் டிஜிட்டல் தளங்களிலில் அது பெரிய செல்வாக்கைச் செலுத்துகின்றது என்றும் சிறீலங்கா சுதந்திரக் கட்சியின் செயலாளர் எஸ்.பி.திசாநாயக்க தெரிவித்துள்ளார்.

கடந்த உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் அது பெற்ற வெற்றி யுத்த வெற்றி வாதத்துக்குக் கிடைத்த ஒரு வெற்றி. யுத்த வெற்றி வாதம் எனப்படுவது 2009 இற்குப் பின்னரான சிங்கள பௌத்த பெருந்தேசிய வாதத்தின் ஆகப் பிந்திய வளர்ச்சியாகும். யுத்த வெற்றியை அடிப்படையாகக் கொண்டு ஒரு வம்ச ஆட்சியை ஸ்தாபிப்பது. அதைத்தான் இப்பொழுது ராஜபக்ஷக்கள் செய்து வருகிறார்கள்.

2015 இல் தோற்கடிக்கப்பட்ட பின்னும் யுத்த வெற்றி வாதமானது அதாவது சிங்கள பௌத்த பெருந்தேசிய வாதத்தின் ஆகப் பிந்திய வளர்ச்சியானது கூட்டுறவுச் சபைகளுக்கான தேர்தலிலும் உள்ளூராட்சி மன்றத் தேர்தலிலும் வெற்றி பெறும் அளவுக்கே தென்னிலங்கையில் அரசியற்களச் சூழல் காணப்படுகிறது.

இலங்கைத்தீவின் பாரம்பரிய சிங்களக் கட்சி ஒன்றின் சிதைவிலிருந்து மற்றொரு புதிய கட்சி பிறந்திருக்கிறது. ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி எனப்படுவது மேற்கத்திய பாரம்பரியத்தில் இருந்து வந்த மேற்கிற்கு விசுவாசமான ஐக்கிய தேசியக் கட்சிக்கு எதிராக உள்ளூர்த்தனம் மிக்க ஒன்றாக தோற்றம் பெற்றது.

உள்ளூர் உணர்வுகளை அதிகம் பிரதிபலிக்கும் ஒரு கட்சியாக நாட்டுக்குள் உள் நோக்கித் திரும்பிய ஒரு கட்சியாக அது தோற்றம் பெற்றது. அதனாலேயே சிங்கள பௌத்த பெருந்தேசிய வாதத்துக்கு வெற்றிகரமாக தலைமை தாங்கியது. இப்பொழுது அக்கட்சியையும் உடைத்துக் கொண்டு சிங்கள பௌத்த பெருந்தேசிய வாதமானது அதன் பிந்திய வடிவமாகிய யுத்த வெற்றி வாதமாக மேலெழுந்திருக்கிறது.

இதன் மூலம் தனது தாய்க் கட்சியை உடைத்த மஹிந்த ராஜபக்ஷ அதேசமயம் தான் பெற்ற யுத்த வெற்றியைத் தனது வம்சத்துக்கு மட்டுமே உரியதாக நிறுவனமயப்படுத்தி இருக்கிறார். இதனால் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியானது ஏறக்குறைய சிதையத் தொடங்கிவிட்டது. இச்சிதைவிலிருந்து கட்சியை காப்பாற்ற திருமதி சந்திரிகாவால் முடியுமா?

இவ்வாறு யுத்த வெற்றி வாதமாக மேலெழும் சிங்கள பௌத்த பெருந் தேசிய வாதத்தை எதிர்த்து நிற்க ரணிலால் முடியுமா?

## அவர்களின் முன்னால் உள்ள தெரிவுகள் குறித்து குழப்பம்

2015இல் அவரால் முடியாதபடியால் தான் அவர் மைத்திரியோடும் சந்திரிகாவோடும் கூட்டு சேர்ந்தார். இப்பொழுது மைத்திரி தலைகீழாக நிற்கிறார். அதுமட்டுமல்ல தனது தாய்க் கட்சியைக் கரைத்து மஹிந்தவின் பலத்தைக் கூட்டியுமிருக்கிறார். இந்நிலையில் யுத்த வெற்றி வாதத்தை எதிர்கொள்ளத்தக்க ஜன வசியம் மிக்க ஒரு தலைவர் ஐக்கிய தேசியக் கட்சிக்குள் இல்லை என்பதே உண்மை.

இருப்பவர்களுக்குள் சஜித் பிரேமதாச பரவாயில்லை என்ற ஓர் அபிப்பிராயம் ஐக்கிய தேசியக் கட்சிக்குள் இருக்கும் இளம் உறுப்பினர்கள் மத்தியிலும் சில மூத்த உறுப்பினர்கள் மத்தியிலும் உண்டு. இவர்களே இப்பொழுது சஜித்தை முன்நிறுத்துகிறார்கள். இந்த அணிக்கு மஹிந்தவும் மைத்திரியும் மறைமுகமாக ஆதரவு வழங்குகிறார்கள். ஏனெனில் அதன்மூலம் ஐக்கிய தேசியக் கட்சியைப் பிளக்கலாம் என்று அவர்கள் நம்புகிறார்கள்.

இது ரணில் விக்கிரமசிங்கவுக்கும் தெரியும். எனினும் அவர் இக்கட்டுரை எழுதப்படும் இந்நாள் வரையிலும் கட்சித் தலைமைப் பொறுப்பை அடுத்த தலைமையிடம் கையளிக்கத் தயாரில்லை. ஜனாதிபதி வேட்பாளர் யார் என்பதை முடிவெடுப்பதை ரணில் ஒத்தி வைத்து வருகிறார். தனக்குச் சாதகமான ஒரு நிலைமையை எப்படிக் கனிய வைக்கலாம் என்று திட்டமிடுகிறார்.

ரணிலோ அல்லது சஜித்தோ அல்லது கரு ஜெயசூரியவோ யாராக இருந்தாலும் ஐக்கிய தேசியக் கட்சியின் ஜனாதிபதி வேட்பாளர் எனப்படுபவர் அதிகபட்சம் தமிழ் முஸ்லிம் வாக்குகளிலேயே தங்கியிருக்க வேண்டியிருக்கும்.

மூவின வாக்குகள்தான் அந்த அணியின் பலம். எனவே ஐக்கிய தேசியக் கட்சியின் வேட்பாளர் யாராக இருந்தாலும் அவர் தவிர்க்க முடியாதபடி தமிழ் மக்களை நோக்கி வர வேண்டியிருக்கும்.இது விடயத்தில் தமிழ் மக்களின் பேரம் அதிகமாக இருக்கும். ஆனால் இதன் அர்த்தம் தமிழ் மக்கள் தமது பேரம் பேசும் பலத்தை பிரயோகித்து ஐக்கிய தேசியக் கட்சியின் வேட்பாளரோடு ஓர் உடன்படிக்கையை எழுதலாம் என்பதல்ல.

அப்படி ஓர் உடன்படிக்கையை எழுதினாலும் அதில் ஐக்கிய தேசியக் கட்சி தமிழ் மக்களுக்கு திருப்தியூட்டும் ஒரு தீர்வை முன்வைக்கப் போவதில்லை என்பது ஒருபுறம் இருக்க, அப்படி ஒரு உடன்படிக்கையையே எழுத முடியாது என்பதே இலங்கைத் தீவின் தேர்தற் களயதார்த்தமாகும்.

ஏனெனில் அவ்வாறு எழுதப்படும் உடன்படிக்கையை மஹிந்த தரப்பு 'கொட்டி- அலியா' உடன்படிக்கை என்று வர்ணிக்கும். யு.என்.பி.தமிழ் மக்களுக்கு நாட்டை விட்டுக் கொடுத்து விட்டது என்று கூறி அதை வைத்தே ஐக்கிய தேசியக் கட்சி வேட்பாளரை அவர்கள் தோற்கடித்து விடுவார்கள்.

இதுதான் நிலைமை.

யாரோடு தமிழ் மக்களுக்கு பேரம் அதிகமோ அவரோடு தமிழ் மக்கள் உடன்படிக்கை எதையும் எழுத முடியாது. ஏனெனில் அப்படி எழுதப்படும் உடன்படிக்கையே அந்த வேட்பாளரை தோற்கடித்து விடும். எனவே எழுதப்படாத ஓர் உடன்படிக்கையின் மீதுதான் அந்த வேட்பாளரை தமிழ்த் தரப்பு ஆதரிக்கலாம்.

அந்த வேட்பாளர் சில சமயம் வெற்றிபெறுவாராக இருந்தால் அவர் எழுதப்படாத அந்தக் கனவான் உடன்படிக்கையை மீறமாட்டார் என்பதற்கு எந்தவிதமான உத்தரவாதமும் இல்லை.

எனவே நடக்கவிருக்கும் ஜனாதிபதி தேர்தலில் தமிழ் மக்கள் யாரை ஆதரித்தாலும் ஆதரிக்காவிட்டால் எவரோடும் எந்தவோர் உடன்படிக்கையையும் எழுத முடியாது. இந்த யதார்த்தத்தை முன்வைத்து சிந்தித்தால் தமிழ் மக்களுக்கு பின்வரும் தெரிவுகளே உண்டு.

முதலாவது தேர்தலைப் புறக்கணிப்பது அதன் மூலம் வெளிப்படையான இனவாதத்தை கக்கும் யுத்த வெற்றி வாதியையும் நாங்கள் ஏற்றுக் கொள்ளவில்லை லிபரல் ஜனநாயக முகமூடி அணிந்த இனவாதிகளையும் நாங்கள் ஏற்றுக் கொள்ளவில்லை என்ற செய்தியை சிங்கள மக்களுக்கும் உலகத்துக்கும் உணர்த்தலாம்.

ஆனால் அவ்வாறு தேர்தலைப் புறக்கணித்தால் அது கோட்டாபயவின் வழிகளை இலகுவாக்கி கொடுக்கக்கூடும். அளிக்கப்பட்ட வாக்குகளில் அதிக தொகை வாக்குகள் என்று வரும்பொழுது தனிச் சிங்கள வாக்குகளைப் பெற்று அவர் வெற்றி பெறக்கூடும்.

இரண்டாவது தெரிவு கோட்டாபயவுடன் உடன்படிக்கைக்கு போவது. அங்கேயும் உடன் படிக்கை எழுத முடியாது. அவர்கள் உடன்படிக் கைக்கு வர மாட்டார்கள். தவிர 13 ஆவது திருத் தத்துக்கு மேல் எதையும் தரமாட்டோம் என்று அத்தரப்பு தெளிவாகக் கூறுகிறது. இது விடயத்தில் ரணிலை விடவும் வெளிப்படையான எதிரியாக அத்தரப்பு காணப்படுகிறது. எனவே அங்கேயும் உடன்படிக்கைக்கு இடமில்லை.

மூன்றாவது தெரிவு ரணிலின் தரப்போடு ஒரு எழுதப்படாத உடன்படிக்கைக்குப் போவது. அதைத்தான் ஐந்தாண்டுகளுக்கு முன் சம்பந்தரும் செய்தார். அதற்கு என்ன நடந்தது ?

இவை தவிர மேலும் ஒரு தெரிவு உண்டு. ஒரு தமிழ் வேட்பாளரை நிறுத்தி அவருக்கே தமிழ் மக்கள் வாக்களிக்கலாம். இரண்டாவது விருப்பு வாக்கை யாராவது ஒரு சிங்கள வேட்பாளருக்கு வழங்கலாம். எந்த ஒரு சிங்கள வேட்பாளரும் 50 வீதமான வாக்குகளை பெறத் தவறினால் இரண்டாவது சுற்று வாக்கு கணக்கெடுப்பு நடக்கும்.

அதில் தமிழ் மக்களின் இரண்டாவது விருப்பத் தெரிவாக உள்ள சிங்கள வேட்பாளர் வெல்லக் கூடும் என்று மு. திருநாவுக்கரசு பல ஆண்டுகளுக்கு முன்பே எழுதியிருக்கிறார்.

இவைதான் தமிழ் மக்கள் முன்னால் உள்ள தெரிவுகள். இவற்றில் எந்த ஒரு தெரிவிலும் தமிழ் மக்கள் எழுதப்பட்ட ஓர் உடன்படிக்கைக்கு போக முடியாது. இது மிகக் குரூரமான ஒரு யதார்த்தம்.

வரவிருக்கும் தேர்தலில் பேரம் அதிகம் உடைய ஒரு மக்கள் கூட்டம் தனது பேரத்தை பிரயோகித்து எதிர்த்தரப்புடன் எந்தவோர் உடன்படிக்கையையும் செய்ய முடியாமல் இருப்பது என்பது. இது தொடர்பில் தமிழ் அரசறிவியலாளர்களும் கருத்துருவாக்கிகளும் ஆழமாகச் சிந்தித்து புதிய தெரிவுகளை உருவாக்க முயற்சிக்க வேண்டும். ஏனெனில் அரசியல் எனப்படுவது சாத்தியக் கூறுகளின் கலை தான்.

நன்றி - ஆதவன்

# வவுனியாவில் ரயில் மோதி இரண்டு பசுக்கன்றுகள் சாவு!

வவுனியா, ஓக. 21

வவுனியா தாண்டிக்குளத்தில் ரயில் மோதி இரண்டு பசுக்கன்றுகள் இறந்துள்ளமைடன் ஒரு கன்று காயமடைந்துள்ளது.

நேற்றுக் காலை யாழ்ப்பாணம் நோக்கி சென்ற ரயிலிலேயே தண்டவாளத்தில் நின்ற 3 பசுக்கன்றுகளை ரயில் மோதியுள்ளது.

இதன் காரணமாக இரண்டு கன்றுகள் சம்பவ இடத்திலேயே பலியாகின. ஒரு கன்று காயமடைந்தது. காயமடைந்த கன்றுக்கு அப்பகுதி மக்கள் சிகிச்சை அளித்தனர்.

இதேவேளை, தாண்டிக்குளம் பகுதியில் அண்மையிலும் 10 மாடுகள் ரயிலுடன் மோதுண்டு பலியாகியிருந்தன.

கால்நடைகள் ரயிலுடன் மோதுண்டு வரும் சம்பவங்கள் வவுனியாவில் அதிகரித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஐ-100)



# சங்கானை பிரதேச உணவகங்கள் மருந்தகங்களில் திடீர் சோதனை







யாழ்ப்பாணம், ஓக. 21

வலி. மேற்குப்பிரதேச சபைக்குட்பட்ட பகுதியில் உணவுக் கட்டுப்பாட்டு அதிகாரிகள் மற்றும் ஆளுநர் செயலணி இணைந்து நேற்று முன் தினம் திங்கட்கிழமை உணவங்கள் மற்றும் மருந்தகங்கள் மீது திடீர் கண்காணிப்பு நடவடிக்கையை முன்னெடுத்தனர்.

வடக்கு மாகாண ஆளுநரின் அறிவுறுத்தலில் இந்த நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டது.

உணவகங்களின் தரம் மற்றும் சட்டத்திற்கமைவாக இயங்குகின்றனவா என்று மேற்கொள்ளப்பட்ட இந்தச் சோதனை நடவடிக்கையின்போது 15 உணவகங்கள் மிகவும் தகுதியற்று சுகாதாரச் சீர்கேடுகளுடனும், உணவுகள் மிகவும் தரமற்ற தயாரிப்புக்கள், உணவு தயாரிக்கும் சமையற்கூடங்கள் மற்றும் பாத்திரங்கள் அசுத்தமாகவும், சமைத்த உணவுகள் பிளாஸ்ரிக் பாத்திரங்களில் சேமிக்கப்பட்டிருந்ததுடன் அழுகிய மரக்கறி வகைகள் சமையல் பாவனைக்கு பயன்படுத்தபட இருந்தமையும் கண்டுபிடிக்கப்பட்டன.

இவற்றில் அதிகளவிலான சுகாதாரச் சீர்கேடுகளுடன் காணப்பட்ட 9 உணவகங்களுக்கு எதிராகச் சட்ட நடவடிக்கை எடுக்கப்படவுள்ளதுடன் ஒரு உணவகத்தில் காணப்பட்ட தகுதியற்ற ரொட்டிகள் மற்றும் மரக்கறிவகைகள் அழிக்கப்பட்டன.

மேலும், சுகாதாரச் சீர்கேடுகளுடன் தரமற்று காணப்பட்ட ஏனைய உணவகங்களுக்குக் கால அவகாசம் வழங்கப்பட்டதுடன் அவ்வாறு தவறும் பட்சத்தில் சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் அறிவுறுத்தப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

மேலும் 4 மருந்தகங்கள் மீது மேற்கொள்ளப்பட்ட சோதனை நடவடிக்கையின்போது 2 மருந்தகங்களில் மருந்தாளராகக் கடமையாற்றுவதற்கான தகுதியை நிறைவு செய்யாத மருந்து வழங்குநர்கள் சேவையில் இருந்தமை கண்டுபிடிக்கப்பட்டு சட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்படவுள்ளது.

வடக்கு மாகாணத்தின் அனைத்துப் பிரதேசங்களிலும் இந்தச் சோதனை நடவடிக்கைகள் தொடரும் என்றும் தகுதியற்ற உணவங்கள் காணப்படின் மக்கள் இதுதொடர்பில் ஆளுநர் அலுவலகத்தின் 021 221 9375 என்ற தொலைபேசி இலக்கத்திற்கு அறியத்தருமாறு கேட்கப்பட்டுள்ளது. (ஐ)



# மஹிந்தவின் கட்டுப்பாட்டில் கோட்டா தமிழர் அச்சமின்றி வாக்களிக்கலாம்!

## இப்படிச் சொல்கிறார் வரதராஜப்பெருமாள்

(எஸ்.நிதர்ஷன்)

யாழ்ப்பாணம், ஓக. 21

**19 ஆவது திருத்தசட்டத்தின் படி இலங்கை ஜனாதிபதிக்கான அதிகாரங்கள் குறைக்கப்பட்டுள்ளன. எனவே கோட்டாபய ராஜபக்ஷ ஜனாதிபதியானாலும் அவருக்கு அதிகாரங்கள் குறைவாகவே இருக்கும். அதுமட்டுமல்லாது மஹிந்தவின் கட்டுப்பாட்டிலேயே கோட்டாபய எப்போதும் இருப்பார். எனவே தமிழ் மக்கள் அச்சம் இன்றி கோட்டாபயவுக்கு வாக்களிக்கமுடியும் எனத் தெரிவித்துள்ளார் வடக்கு - கிழக்கு மாகாண முன்னாள் முதலமைச்சர் வரதராஜப்பெருமாள்.**



யாழ்ப்பணத்தில் உள்ள அவரது சமூக ஜனநாயகக் கட்சி அலுவலகத்தில் நடத்திய ஊடகவியலாளர் சந்திப்பிலேயே அவர் இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது –

முன்னாள் பாதுகாப்புச் செயலளர் ஜனாதிபதித் தேர்தலில் வெற்றி பெற்றாலும் அவரது சகோதரரான மஹிந்த ராஜபக்ஷவின் முழுக் கட்டுப் பாட்டிலேயே அவர் செயற்படுவார். மஹிந்த ராஜபக்ஷ மக்களால் மதிக்கப்படும் தலைவராகக் காணப்படுகின்றார். நாம் கோட்டாவை மட்டும் நம்பி ஆதரவு வழங்கவில்லை. மஹிந்த மீதான முழு நம்பிக்கையிலேயே ஆதரவு வழங்கியுள்ளோம்.

தற்போது நிறைவேற்றப்பட்டுள்ள 19 ஆவது திருத்தச் சட்டத்தின் படி ஜனாதிபதிக்கான அதிகாரங்கள் குறைக்கப்பட்டுப் பிரதமருக்கே அதிகாரங்கள் அதிகரிக்கப்பட்டுள்ளன. அப்படியானால் பிரதமராக மஹிந்த வந்தால் முழு அதிகாரமும் அவரிடமே செல்லும். அத்துடன் பிரதமராக மஹிந்த வந்தால் தனது அதிகாரங்களைக் கோட்டாவிடம் வழங்கச் சம்மதிக்க மாட்டார். இதனால் சட்டத்திலும் மாற்றங்களும் ஏற்படா. எனவே கோட்டாபயவைப் பார்த்து தமிழ் மக்கள் அச்சம் கொள்ளத்தேவையில்லை – என்றார். (ஐ- 07)

# ஆஸ்திரேலியா பயணிக்க முயற்சித்த 10 பேர் கைது

கொழும்பு, ஓக. 21

கடல்வழியாக ஆஸ்திரேலியா செல்லும் நோக்கில் வென்னப்புவ பகுதியில் உள்ள வீடொன்றில் தங்கியிருந்த 10 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

நேற்று முன் தினம் இரவு இந்த நபர்கள் கைதுசெய்யப்பட்டுள்ளனர் எனப் பொலிஸார் தெரிவித்தனர்.

வென்னப்புவ, நைனாமடம் பகுதியில் உள்ள வீட்டில் சந்தேகத்துக்கு இடமான முறையில் சிலர் தங்கியுள்ளனர் எனப் பொலிஸாருக்கு தகவல் வழங்கப்பட்டுள்ளது.

இதனையடுத்து பொலிஸார் மேற்கொண்ட சுற்றிவளைப்பில் சிலாபம் பகுதியைச் சேர்ந்த சந்தேக நபர்கள் கைதுசெய்யப்பட்டுள்ளனர். (ஐ)




# கேரளக் கஞ்சாவுடன் ஒருவர் யாழில் கைது!

யாழ்ப்பாணம், ஓக. 21

யாழ்ப்பாணம் ஸ்ரீதர் தியேட்டருக்கு அண்மையில் ஒன்றரைக் கிலோ கேரளக் கஞ்சாவுடன் குருநகரைச் சேர்ந்த ஒருவரை விசேட அதிரடிப்படையினர் கைது செய்துள்ளனர்.

யாழ்ப்பாணம் நகருக்குள் கஞ்சா கடத்தல் சம்பவம் இடம்பெறுவதாக விசேட அதிரடிப்படையினருக்குகிடைக்கப் பெற்ற இரகசிய தகவலை யடுத்து மேற்கொண்ட தேடுதல் வேட்டையிலேயே இந்தக் கைது இடம்பெற்றுள்ளது.

விசேட அதிரடிப்படையினர் கைது செய்த நபரிடம் இருந்து கஞ்சாவை மீட்டுள்ளனர் என்றும் தைதான என்றும் அந்த நபர் யாழ்ப்பாணம் குருநகரைச் சேர்ந்த 30 வயதுடைய நபர் என்றும் தெரிவிக்கப்படுகின்றது.

கைது செய்யப்பட்டவர் யாழ்ப்பாணம் பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளார். மேலதிக விசாரணைகளை யாழ்ப்பாணம் பொலிஸார் மேற்கொண்டுள்ளனர். (ஐ-07)

# இலங்கை அணிக்கெதிரான ரி – 20: மாற்றத்துடன் நியூஸிலாந்து அணி




நியூஸிலாந்து கிரிக்கெட் அணி, தற்போது இலங்கைக்கு கிரிக்கெட் சுற்றுப் பயணம் மேற்கொண்டு டெஸ்ட் தொடரில் விளையாடி வருகின்றது.

இரண்டு போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரில் விளையாடி வரும் நியூஸிலாந்து அணி, முதல் போட்டியில் இலங்கை அணியிடம் படுதோல்வியைச் சந்தித்தது.

எதிர்வரும் இரண்டாவதும், இறுதியுமான டெஸ்ட் போட்டி, எதிர்வரும் 22ஆம் திகதி பி.சாரா ஓவல் மைதானத்தில் நடைபெறவுள்ளது.

அடுத்தாக இந்த சுற்றுப்பயணத்தின் இறுதி தொடராக மூன்று போட்டிகள் கொண்ட ரி –20 தொடரில் நியூஸிலாந்து விளையாடவுள்ளது.

இந்த நிலையில், இந்த ரி – 20 தொடருக்கான 14பேர் கொண்ட நியூஸிலாந்து அணி விவரம் அறிவிக்கப்பட்டுள்ளது.

எதிர்பார்ப்பு மிக்க இந்த அணியில் அணித் தலைவர் கேன் வில்லியம்சன் மற்றும் முன்னணி வேகப்பந்து வீச்சாளர் ட்ரென்ட் போல்ட் ஆகியோருக்கு ஓய்வளிக்கப்பட்டுள்ளது.

உலகக்கிண்ண கிரிக்கெட் தொடரில் இவர்கள் இருவரும் மிகப் பெரிய பங்களிப்பினை வழங்கியதால், அவர்களுக்கு ஓய்வு வழங்கப்பட்டுள்ளது.

இதற்கு பதிலாக முன்னணி வேகப்பந்து வீச்சாளரான டிம் சவுத்தீ, அணியை வழிநடத்தவுள்ளார். மேலும் விக்கெட் காப்பாளரான டிம் செய்பர்ட் அணிக்குள் உள்வாங்கப்பட்டுள்ளார்.

இதுதவிர மிட்செல் சான்ட்னர், டொட் ஆஸ்ட்ல் மற்றும் இஷ் சோதி ஆகிய மூன்று சுழற்பந்து வீச்சாளர்கள் அணியில் சேர்த்துக் கொள்ளப்பட்டுள்ளனர்.

இந்த ஆண்டு ஆரம்பத்தில் இந்திய அணிக்கெதிரான தொடரில் விளையாடிய வேகப்பந்து வீச்சாளர் டக் பிரெஸ்வெலுக்கு பதிலாக பந்து வீச்சாளர் செத் றென்ஸ், அணியில் இணைத்துக் கொள்ளப்பட்டுள்ளார். துடுப்பாட்ட வீரர் டொம் புரூஸும் அணியில் சேர்த்துக் கொள்ளப்பட்டுள்ளார்.

டிம் சவுத்தீ தலைமையிலான அணியில், டொட் ஆஸ்ட்ல், டொம் புரூஸ், கொலின் டி கிராண்ட்ஹோம், லொக்கி பெர்குசன், மார்டின் கப்டில், ஸ்கொட் குக்ஜெல்லெய்ன், டேரல் மிட்செல், செத் றென்ஸ்,கொலின் முன்றோ, மிட்செல் சான்ட்னர், டிம் செய்பர்ட், இஷ் சோதி, ரோஸ் டெய்லர் ஆகியோர் இடம்பெற்றுள்ளனர்.

இரு அணிகளுக்கிடையிலான மூன்று போட்டிகள் கொண்ட ரி –20 தொடரின் முதல் போட்டி, எதிர்வரும் 1ஆம் திகதி பல்லேகல மைதானத்தில் நடைபெறவுள்ளது.

இரண்டாவது போட்டி 3ஆம் திகதியும், மூன்றாவது போட்டி 6ஆம் திகதியும் பல்லேகல மைதானத்தில் நடைபெறவுள்ளது.



# டெஸ்ட் தரவரிசையில் முன்னேறிய ஸ்மித், திமுத்

ஐ.சி.சி.யின் டெஸ்ட் துடுப்பாட்ட வீரர்களுக்கான தரவரிசையில் அவுஸ்திரேலிய வீரர் ஸ்டீவ் ஸ்மித் இரண்டாம் இடத்தைப் பிடித்துள்ளார்.

இதேவேளை, காலி டெஸ்டில் சதம் குவித்த இலங்கை அணித்தலைவர் திமுத் கருணாரத்ன 8ஆவது இடத்திற்கு முன்னேறியுள்ளார்.

ஆஷஸ் தொடரின் இரண்டாவது டெஸ்ட் மற்றும் இலங்கை – நியூசிலாந்து அணிகளுக்கான முதல் டெஸ்ட் ஆகியன நேற்று முன் தினம் நிறைவடைந்துள்ள நிலையில், ஐ.சி.சி.யின் டெஸ்ட் துடுப்பாட்ட வீரர்களுக்கான புதிய தரப்படுத்தல் வெளியிடப்பட்டுள்ளது. இதில், ஆஷஸ் தொடரின் மூன்று இன்னிங்ஸ்களில் 378 ஓட்டங்களைக் குவித்த அவுஸ்ரேலிய வீரர் ஸ்டீவ் ஸ்மித் இரண்டாம் இடத்திற்கு முன்னேறியுள்ளார்.

இந்தப் பட்டியலில் இந்திய அணித்தலைவர் விராட் கோஹ்லி முதலிடத்தில் நீடிக்கின்றார்.

இரண்டாம் இடத்தில் இருந்த நியூசிலாந்து அணித்தலைவர் கேன் வில்லியம்சன், காலி டெஸ்ட்டில் பிரகாசிக்கத் தவறியமையை அடுத்து மூன்றாம் இடத்திற்குப் பின் தள்ளப்பட்டுள்ளார்.

இதேவேளை, 12 ஆவது இடத்தில் இருந்த இலங்கை அணித் தலைவர் திமுத் கருணாரத்ன, காலி டெஸ்டின் நான்காம் இன்னிங்ஸில் பெற்ற சதத்துடன், நான்கு இடங்கள் முன்னேறி, 8 ஆவது இடத்தில் தரப்படுத்தப்பட்டுள்ளார்.

லோர்ட்ஸ் டெஸ்டில் சதமடித்த இங்கிலாந்தின் பென் ஸ்டோக்ஸ் 6 இடங்கள் முன்னேறி, 26 ஆவது இடத்தில் உள்ளார்.

லோர்ட்ஸ் டெஸ்டில் உபாதைக்கு உள்ளான ஸ்டீவ் ஸ்மித், தன் உபாதையில் இருந்து மீண்டெழுந்து எஞ்சிய மூன்று போட்டிகளில் விளையாடுவாராக இருந்தால், கோஹ்லியின் முதலிடம் பறிபோகக் கூடிய வாய்ப்பு உள்ளது.

டெஸ்ட் துடுப்பாட்ட வீரர்களின் தரவரிசையில் முதலிடத்தில் இருந்த ஸ்டீவ் ஸ்மித், பந்தைச் சேதப்படுத்திய விவகாரத்தினால், தடை காரணமாக கடந்த ஒரு வருடம் சர்வதேச போட்டிகளில் விளையாடவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)

# அகில தனஞ்சய – கேன் வில்லியம்சன் இருவரது பந்து வீச்சிலும் சந்தேகம்!





இலங்கை கிரிக்கெட் அணியின் சுழற்பந்து வீச்சாளர் அகில தனஞ்சய மற்றும் நியூஸிலாந்து அணியின் தலைவர் கேன் வில்லியம்சன் ஆகிய இருவரினதும் பந்து வீச்சு முறைமையில் சந்தேகம் இருப்பதாக சர்வதேச கிரிக்கெட் சபை தெரிவித்துள்ளது.

இதனால், 14 நாள்களுக்குள் அவர்கள் பந்துவீச்சு நிலைகள் குறித்து ஆய்வு செய்யவேண்டுமெனவும் இருநாட்டு கிரிக்கெட் சபைகளிடமும் ஐ.சி.சி. கோரிக்கை விடுத்துள்ளது.

இரு அணிகளுக்கிடையில் காலியில் நடைபெற்ற முதலாவது டெஸ்ட் போட்டியின்போதே இவர்களின் பந்துவீச்சுப் பாணியில் சந்தேகம் நிலவுவதாக நடுவர்கள் குற்றம் சுமத்தியுள்ளனர்.

இந்தப் போட்டியில், அகில தனஞ்சய முதல் இன்னிங்ஸில் 5 விக்கெட்டுகளையும், இரண்டாவது இன்னிங்ஸில் 1 விக்கெட்டினையும் வீழ்த்தினார்.

கேன் வில்லியம்சன் இந்த போட்டியில், இரண்டாவது இன்னிங்ஸில் 3 ஓவர்களை வீசியிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

25 வயதான இடது கை சுழற்பந்து வீச்சாளர் அகில தனஞ்சய, கடந்த ஆண்டு காலி மைதானத்தில் நடைபெற்ற இங்கிலாந்து அணிக்கெதிரான டெஸ்ட் போட்டியில், அனுமதிக்கப்பட்ட 15 பாகை கோண அளவினை விட நீண்ட கோணத்தில் பந்து வீசுவது கண்டறியப்பட்டது.

இதனால், அவருக்கு சர்வதேசப் போட்டிகளில் பந்துவீச தடை விதிக்கப்பட்டது. இதன்பிறகு அவுஸ்ரேலியாவில் அவரின் பந்து வீச்சு முறைமை பரிசோதனைக்குட்படுத்தப்பட்டது. பின்னர், அவர் தனது பந்துவீச்சு முறைமையை மாற்றியதால், மீண்டு சர்வதேசப் போட்டிகளில் பந்து வீச அனுமதிக்கப்பட்டார். தற்போது அவர் மீண்டும் சர்ச்சையில் சிக்கியுள்ளார். (ஐ)

காலைக்கதிர் Kalaikkathir



# அமெரிக்கப் பிரஜையிடம் யாழில் பணம் கொள்ளை

கோண்டாவில் பகுதியில் வைத்து அமெரிக்கப் பிரஜை ஒருவரிடம் இருந்து 300 அமெரிக்க டொலர் பணத்தை இரு இளைஞர்கள் பறித்துக்கொண்டு சென்ற சம்பவம் நேற்று மதியம் இடம்பெற்றுள்ளது.

யாழ்ப்பாணத்துக்குச் சுற்றுப்பயணம் வந்த அமெரிக்கப் பிரஜை கோண்டாவில் பகுதியில் பயணித்துள்ளார். அப்போது அவரைப் பின் தொடர்ந்து வந்த இரு இளைஞர்கள் அவரிடம் இருந்த பணத்தைப் பறித்துக் கொண்டு மோட்டார் சைக்கிளில் தப்பிச் சென்றுள்ளனர்.

பாதிப்படைந்த அமெரிக்கப் பிரஜை கோப்பாய் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாட்டைப் பதிவு செய்துள்ளார்.இந்தச் சம்பவம் தொடர்பில் பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர். (ஐ-07)

## ஒட்டுமொத்த...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர்மேலும்தெரிவிக்கையில்-

அப்படிப்பட்ட கோட்டாபயவை ஆதரிக்கக் கூடியவாறு தமிழ்த் தலைமைகள் தங்களது கருத்துக்களைச் சொல்லுவது என்ற விடயத்தில் சரி, பிழை இருக்கலாம். வடக்கு, கிழக்கு தமிழ் மக்கள் அதை ஏற்று விடமாட்டார்கள். தேர்தல் ஆணைக்குழுவால் தேர்தல் திகதி அறிவிக்கப்படாத நிலையில் குறிப்பாக வடக்கு, கிழக்கில் சந்திக்குச் சந்தி மூலைக்கு மூலை ஜனாதிபதித் தேர்தல் தொடர்பாக மக்கள் மத்தியில் பேசப்பட்டு வருகின்றது.

இதற்குரிய ஒரு எடு கோளாக மக்கள் மத்தியில் ஜனாதிபதி தேர்தலுக்குக் கூடுதலான விகிதம் வாக்களிக்கக் கூடிய நிலை ஏற்பட்டுள்ளது. 30 வருட காலம் தமிழ் மக்களுடைய விடுதலைக்காக மிகவும் கூர்மைத் தனத்தோடு வலிமையோடு போராடிய துப்பாக்கிகள் மௌனிக்கப்பட்ட நிலையில் மிகத் துன்ப நிலைகளைச் சுமந்து மக்கள் இந்தத் தேர்தலை எதிர்கொள்ளத் தயாராகின்றனர்.

மக்களின் பிரதிநிதிகள், கட்சிகளைப் பொறுத்தவரை மக்களின் ஒட்டு மொத்தமான அபிப்பிராயங்களை நிறைவேற்றும் வகையில் தேர்தலில் தங்களுடைய செயற்பாடு இருக்கவேண்டும். இதன் பிறகுதான் இந்த கட்சித் தலைமைகள் தங்களுடைய கருத்துக்களையும் முடிவுகளையும் எடுக்க வேண்டும். அதற்கப்பால் மற்றவர்களுடைய தூண்டுதல்களுக்காக தமிழ்த் தலைமைகள் தங்களுடைய கருத்துகளைச் சொல்லிவிடக்கூடாது.

ஆகவே எதிர்காலத்தில் ஜனாதிபதித் தேர்தல் தொடர்பான சம்பந்தப்பட்ட விடயத்தில் தமிழ் மக்களை ஏமாற்றுவதற்கு உடந்தையாகி விடக்கூடாது. அப்படி ஏமாற்ற நினைத்தால் வடக்கு, கிழக்கு மக்கள் அதை நிராகரிப்பார்கள் என்பதையும் தெரிவித்து கொள்கின்றேன் - என்றுள்ளது. (ஐ)

## எல்லை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அமெரிக்க வெளியிட்ட அறிக்கைக்கு கண்டனம் தெரிவித்து விமல் வீரவன்ஸ வெளியிட்டுள்ள அறிக்கையிலேயே மேற்கண்டவாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

அந்த அறிக்கையில் - இராணுவத் தளபதியாக லெப்டினன் ஜெனரல் சவேந்திர சில்வா ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவினால் நியமிக்கப்பட்டார். இந்த நியமனமானது இலங்கையின் உள்ளக விவகாரமாகும். இந்நிலையில் இந்த நியமனம் தொடர்பில் இலங்கைக்கான அமெரிக்கத் தூதுவர் அலைனா ரெப்லிட்ஸ் தெரிவித்துள்ள கருத்தானது வன்மையாகக் கண்டிக்கத்தக்கதாகும் - என்றுள்ளது. (ஐ)

## 16 கிலோ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஸார் தெரிவித்தனர்.

சந்தேகநபர்கள் இருவரும் கடற்படையினரால் கைது செய்யப்பட்டு ஒப்படைக்கப்பட்டனர் என்றும் ஊர்காவற்றுறைப் பொலிஸார் குறிப்பிட்டனர்.

சந்தேகநபர்களில் ஒருவர் மன்னார் பேசாலைப் பகுதியைச் சேர்ந்தவர். மற்றவர் வவுனியா செட்டிகுளம் பகுதியைச் சேர்ந்தவர் என்பது விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

சந்தேகநபர்கள் இருவரும் நேற்றுக் காலை கஞ்சா போதைப் பொருளைக் கடத்திச் செல்ல முற்பட்டபோது புங்குடுதீவுப் பிள்ளையார் கோவிலுக்கு அருகில் வைத்து கடற்படையின் புலனாய்வுப் பிரிவினர் கைது செய்தனர்.

சந்தேகநபர்களின் உடைமையில் இருந்து 16 கிலோ கிராம் கஞ்சா கைப்பற்றப்பட்டது. கஞ்சாவின் பெறுமதி 40 லட்சம் ரூபா என கணக்கிடப்பட்டுள்ளது.

சம்பவம் தொடர்பில் மேல் விசாரணைகளை மேற்கொண்டு வரும் ஊர்காவற்றுறைப் பொலிஸார், சந்தேகநபர்களை ஊர்காவற்றுறை நீதிவான் நீதிமன்றத்தில் முற்படுத்த நடவடிக்கை எடுத்துள்ளனர். (ஐ-07)

## சவேந்திர சில்வாவின் கடைவாயில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நாடாளுமன்றில் நேற்றுப் பிற்பகல் உரையாற்றும்போதே அவர் இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் -

சவேந்திர சில்வாவின் கடைவாயில் தமிழர்களின் குருதி வழிகிறது . அவரையே இராணுவத் தளபதியாக நியமித்திருக்கிறார் ஜனாதிபதி. வடக்கு கிழக்கில் தமிழர்களை போர் வரையறைக்குள் - இராணுவ பிடிக்குள் வைத்திருப்பதற்கான செய்தியே அது.

உலக அரங்கில் 21 ஆம் நூற்றாண்டின் இனப்படுகொலைகளைச் செய்த சவேந்திர சில்வாவை இராணுவத் தளபதியாக நியமித்துள்ளீர்கள். தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைவர் பிரபாகரனின் மகன் பாலச்சந்திரனுக்கு பிஸ்கட் கொடுத்து சுட்டுக் கொன்றவர் இவர். இசைப்பிரியாவைச் சுட்டுக்கொன்றவரும் இவர்தான். தமிழர்களான நாங்கள் அவரின் நியமனத்தை ஏற்கவில்லை - என்றார். (ஐ)

## கனடாவும்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

குறிப்பிட்டுள்ளது.

சவேந்திர சில்வா நியமனம் குறித்து நேற்றுக் கொழும்பில் உள்ள கனேடிய தூதரகம் அறிக்கையொன்றை வெளியிட்டுள்ளது. அந்த அறிக்கையிலேயே இந்த விடயம் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

இறுதிப்போரில் பல மனித உரிமை குற்றச்சாட்டுக்கள் சுமத்தப்பட்ட மேஜர் ஜெனரல் சவேந்திர சில்வா புதிய இராணுவத் தளபதியாக நியமிக்கப்பட்டுள்ளமை கவலையளிப்பதாக அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அவரது நியமனம் நல்லிணக்கம் மற்றும் பொறுப்புக்கூறல் முயற்சிகளைக் குறைமதிப்புக்கு உட்படுத்துகிறது என்றும் கனேடிய தூதரகம் தெரிவித்துள்ளது.

தமிழீழ விடுதலைப் புலிகளுக்கு எதிரான இறுதிக்கட்டப் போரில், இலங்கை இராணுவத்தின் 58ஆவது படைப்பிரிவுக்கு சவேந்திர சில்வா தலைமை தாங்கியிருந்தார்.

அவரது படைப்பிரிவு, சர்வதேச மனிதாபிமான மற்றும் மனித உரிமைச் சட்ட மீறல்களில் ஈடுபட்டதாக ஐக்கிய நாடுகளின் விசாரணை அறிக்கைகளில் குற்றம் சாட்டப்பட்டுள்ளதாக அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## சஹ்ரானிடம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தௌஹீத் ஜமாத்தின் தலைவர் சஹ்ரான் காசிமுடன் இணைந்து ஆயுதப் பயிற்சி பெற்றனர் என்ற குற்றச்சாட்டில் மௌலவிகள் இருவர் கைது செய்யப்பட்டுள்ளனர் என்று பொலிஸ் ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

ஹெட்டிப்பொல மற்றும் நிக்கவெரட்டிய ஆகிய பகுதிகளில் வைத்து சந்தேகநபர்கள் இருவரும் நேற்றுச் செவ்வாய்க்கிழமை பயங்கரவாத விசாரணைப் பிரிவினரால் கைது செய்யப்பட்டனர் என்று பொலிஸ் ஊடகப் பேச்சாளர், பொலிஸ் அத்தியட்சகர் ருவான் குணசேகர தெரிவித்தார்.

தேசிய தௌஹீத் ஜமாத்தின் தலைவர் சஹ்ரான் காசிமின் நுவரேலியா பயிற்சி முகாமில் மௌலவிகள் இருவரும் ஆயுதப் பயிற்சி பெற்றனர் என்பது விசாரணைகளில் தெரியவந்தது. அதனடிப்படையில் பயங்கரவாத விசாரணைப் பிரிவினர் அவர்கள் இருவரையும் நேற்றுக் கைது செய்தனர் என்றும் பொலிஸ் ஊடகப் பேச்சாளர் குறிப்பிட்டார்.

இதேவேளை, ஏப்ரல் 21 உயிர்த்த ஞாயிறு தினத்தன்று நாட்டில் நடத்தப்பட்ட பயங்கரவாதத் தாக்குதல்களின் பின்னர் 200 பேர்வரை பயங்கரவாத விசாரணைப் பிரிவு மற்றும் குற்ற விசாரணைப் பிரிவினரால் கைது செய்யப்பட்டு தடுத்துவைக்கப்பட்டுள்ளனர். மேலும் பலர் நீதிமன்றக் காவலில் வைக்கப்பட்டுள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)

## சவேந்திர சில்வாவின் நியமனம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பேச்சாளர் ஸ்டீபன் டுஜாரிக் தெரிவித்துள்ளார்.

நியூயோர்க்கில் நேற்று முன்தினம் நடந்த நாளாந்த செய்தியாளர் சந்திப்பில் கருத்து வெளியிட்ட போதே அவர் இதனைக் கூறினார்.

இலங்கை இராணுவத் தளபதியாக லெப்.ஜெனரல் சவேந்திர சில்வா நியமிக்கப்பட்டுள்ளமை குறித்து சிலர் கேள்வி எழுப்பியிருந்தனர். ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளர் பணியகம், ஏற்கனவே வெளியிட்டுள்ள அறிக்கையை நீங்கள் பார்த்திருப்பீர்கள்.

எமது தரப்பில், இந்த நியமனம் குறித்து நாங்களும் கவலையடைகிறோம்.

ஐ.நா. அமைதி காப்பு நடவடிக்கைகளில்,நிறுத்தப்பட்டுள்ள அனைத்து பணியாளர்களும், மிகஉயர்ந்த மனித உரிமைத் தரங்களுக்கு அமைய இருக்க வேண்டும் என்ற விடயத்தில், ஐ.நா. உறுதியுடன் உள்ளது.

ஐ.நா அமைதிகாப்பு நடவடிக்கைகளில் பங்கேற்கும் அனைத்து இலங்கைச் சீருடைப் பணியாளர்களும் விரிவான மனித உரிமைகள் பரிசோதனைக்கு உட்படுத்தப்படுகிறார்கள். என்றும் அவர் தெரிவித்தார். (ஐ)

## 7,000 அடி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தளத்தில் நேற்றுக் காலை இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

இலங்கை விமானப்படை விமானத்தில் இருந்து, பரசூட் மூலம் குதிக்கும் பயிற்சியில் ஈடுபட்டிருந்த சிறப்புப் படையைச் சேர்ந்த அதிகாரி ஒருவரே எதிர்பாராத விதமாக நிலத்தில் வீழ்ந்து மரணமானார்.

சுமார் 7000 அடி உயரத்தில் இருந்து குதித்த இவரின், பரசூட் சரியாக விரியாததால் அவர் நிலத்தில் வீழ்ந்தார் எனத் தகவல்கள் தெரிவித்தன. (ஐ)

## சவேந்திர சில்வா...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

யிடுகின்ற அமெரிக்காவுக்கு, யுலிசிஸ் கிரான்ட் முக்கியம் என்பதைப் போல, நாட்டிற்காகப் போர் புரிந்த சவேந்திர சில்வா எமக்கு முக்கியம் என்பதை அனைவரும் புரிந்து கொள்ள வேண்டும் என்று அமைச்சர் சம்பிக ரணவக்க தெரிவித்தார்.

நேற்று நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பில் ஊடகவியலாளர்கள் எழுப்பிய கேள்விகளுக்குப் பதிலளிக்கையிலேயே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

இராணுவத் தளபதியாக மேஜர் ஜெனரல் சவேந்திர சில்வா நியமிக்கப்பட்டமைக்கு அமெரிக்கா எதிர்ப்பு வெளியிட்டிருக்கிறது. இதுகுறித்து ஜாதிக ஹெல உறுமயவின் நிலைப்பாடு என்ன? என்ற கேள்விக்கு விளக்கமளித்த அவர்,

இராணுவத் தளபதியை நியமிக்கும் அதிகாரம் முப்படைகளின் பிரதானியான ஜனாதிபதிக்கு உண்டு. எனவே அது குறித்து கருத்துக்கூற முடியாது. ஆனால் சவேந்திர சில்வாவின் நியமனம் தொடர்பில் அமெரிக்காவின் கருத்து தொடர்பில் கூறுவதாயின் -

ஒன்றை நினைவு படுத்த விரும்புகின்றேன். ஆபிரகாம் லிங்கன் அமெரிக்காவின் ஜனாதிபதியாக இருந்த காலகட்டத்தில் அமெரிக்கா இரண்டாகப் பிளவுபடும் நிலையேற்பட்டது. அதன்போது ஆபிரகாம் லிங்கனின் வட படையணிக்குத் தலைமை தாங்கிச்சென்ற இராணுவ வீரரான யுலிசிஸ்.எஸ்.கிரான்ட் தெற்குப் படையைத் தோற்கடித்து, அமெரிக்காவை ஐக்கியப்படுத்தினார்.

அப்போது யுலிசிஸ் கிரான்ட் மீதும் போர்க்குற்றச்சாட்டுக்கள் முன்வைக்கப்பட்டன. ஆனால் அன்று கிரான்ட் அப்போரில் பங்கேற்று, வெற்றியடைந்திருக்காவிட்டால் இன்றைய வல்லாதிக்கம் பொருந்திய ஐக்கிய அமெரிக்கா இருந்திருக்காது.

அதேபோன்றுதான் சவேந்திர சில்வாவும் தனது தாய், தந்தையைக் காப்பாற்றுவதற்காக யுத்தத்திற்குச் செல்லவில்லை. மாறாக நாட்டிற்காகவே சென்றார். குற்றங்கள் ஏதேனும் இருப்பின் அதனை முறைப்படி விசாரணை செய்வதற்கு நீதித்துறை உண்டு.

எமது நாட்டின் நீதித்துறை சுயாதீனமாகச் செயற்படுவதைக் கடந்த காலங்களில் நிரூபித்திருக்கின்றோம். எனவே அமெரிக்காவிற்கு யுலிசிஸ்.எஸ்.கிரான்ட் எவ்வாறு முக்கியமோ, அதேபோன்று எமக்கு சவேந்திர சில்வா முக்கியம் என்பதை அனைவரும் உணர்ந்து கொள்ள வேண்டும். என்று அவர் கூறினார். (ஐ)

## இந்திய மீனவர்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நேற்று அதிகாலை கைது செய்துள்ளனர்.

இவ்வாறு கைது செய்யப்பட்டவர்கள் தமிழகத்தின் புதுக்கோட்டையை சேர்ந்தவர்கள் என்று தெரிவிக்கப்படுகின்றது.

கைது செய்யப்பட்ட மீனவர்கள் பயன்படுத்திய படகை நெடுந்தீவுக் கடற்படையினர் தடுத்துவைத்துள்ளமையுடன் கைதான மீனவர்கள் யாழ்ப்பாணத்தில் உள்ள நீரியல் வளத் திணைக்கள அதிகாரிகளிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளனர். (ஐ-07)

## நவாலி வடக்கில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஊற்றிக் கொழுத்திவிட்டுத் தப்பித்தது என்று பொலிஸார் தெரிவித்தனர்.

மானிப்பாய் நவாலி வடக்கில் நேற்றுப் பிற்பகல் 1.45 மணியளவில் இந்தச் சம்பவம் இடம்பெற்றது.

சம்பவத்தில் கையில் படுகாயமடைந்த சத்தியசீலன் சயந்தன் (வயது 20) என்ற இளைஞன் யாழ். போதனா வைத்தியசாலையில் சிகிச்சைக்காகச் சேர்க்கப்பட்டுள்ளார்.

மோட்டார் சைக்கிள் ஒன்றில் முகத்தைத் துணியால் மூடியவாறு மூன்று பேர் வாள்களுடன் வந்தனர். அவர்கள் வீட்டிலிருந்த தொலைக்காட்சிப் பெட்டி, சவுண்ட் சாதனங்கள் மற்றும் கண்ணாடி அலுமாரி என்பவற்றைக் கைக்கோடாரியால் கொத்திச் சேதப்படுத்திவிட்டு அவற்றைப் பெற்றோல் ஊற்றித் தீவைத்தனர்.

அத்துடன், இளைஞனை வெட்டிக் காயப்படுத்திவிட்டுத் தப்பிச் சென்றனர். அவர்கள் மூவரையும் அடையாளம் காண முடியவில்லை என்று ஆரம்ப விசாரணையில் தெரிவிக்கப்பட்டது.

சம்பவம் தொடர்பில் மானிப்பாய் பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர். (ஐ-07)

## ஊடகவியலாளர்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

புதிய இராணுவத் தளபதியாக லெப்.ஜெனரல் சவேந்திர சில்வா நியமிக்கப்பட்டுள்ளமை குறித்து அனைத்துலக சமூகமும் உள்ளூர்ச் செயற்பாட்டாளர்களும் அதிருப்தியை வெளிப்படுத்தி வரும் நிலையில், இலங்கை இராணுவத்தின் இந்த அறிவிப்பு வெளியாகியுள்ளது.

இலங்கை இராணுவம் ஆண்டுதோறும் நடத்தும், கொழும்பு பாதுகாப்புக் கருத்தரங்கு எதிர்வரும் 29ஆம், 30ஆம் திகதிகளில், பண்டாரநாயக்க மாநாட்டு மண்டபத்தில் நடைபெறவுள்ளது,

இந்தக் கருத்தரங்கு தொடர்பாக விளக்கமளிக்கும் ஊடக சந்திப்பு நேற்று இராணுவத் தலைமையகத்தில் நடைபெறும் என அறிவிக்கப்பட்டிருந்தது.

இந்த நிலையில் நேற்று முன்தினம் இராணுவத் தளபதியாக லெப். ஜெனரல் சவேந்திர சில்வா நியமிக்கப்பட்டமையை அடுத்து, உள் நாட்டிலும், அனைத்துலக அளவிலும் கடுமையான எதிர்ப்புகள் வெளியிடப்பட்டு வருகின்றன.

அமெரிக்கா, ஐ.நா. மனித உரிமை ஆணையாளர் உள்ளிட்ட பல்வேறு தரப்புகளும் இந்த நியமனம் குறித்து கவலை வெளியிட்டுள்ள நிலையில், நேற்றைய ஊடக சந்திப்பை இராணுவம் காலவரையின்றி ஒத்திவைத்துள்ளது. (ஐ)

## இலங்கையின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இந்த விடயம் குறித்து நேற்று அறிக்கை வெளியிட்ட விவகார அமைச்சு, இந்த நியமனம் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன எடுத்த தீர்மானம். நாட்டின் இறையாண்மையின் அடிப்படையிலானது. தேவையற்ற கருத்துக்களை ஏற்றுக்கொள்ள முடியாது.

இலங்கையில் பொதுச்சேவை பதவியுயர்வுத் தீர்மானங்கள் மற்றும் உள்ளக நிர்வாகச் செயன்முறைகளைப் பாதிக்கும் வகையிலான சர்வதேசத்தின் முயற்சிகள் தேவையற்றவையும் ஏற்றுக்கொள்ள முடியாதவையுமாகும். அத்தோடு சர்வதேச சமூகத்தினால் முன்வைக்கப்படும் குற்றச்சாட்டுக்கள் இயற்கை நீதிக்கு முரணானவை - என்றுள்ளது.

சவேந்திர சில்வா இராணுவத் தளபதியாக நியமிக்கப்பட்டமைக்கு சர்வதேச மட்டத்தில் எழுந்த எதிர்ப்புக்களை அடுத்தே இலங்கை வெளிவிவகார அமைச்சு இந்த அறிக்கையை வெளியிட்டமை குறிப்பிடத்தக்கது. (ஐ)

## சரியான தீர்மானத்தையே எடுப்பார் பிரதமர் ரணில்

கொழும்பு, ஓக. 21
ஐக்கிய தேசியக் கட்சியின்தலைவர்பிரதமர்ரணில் விக்கிரமசிங்க 2010 மற்றும் 2015ஆம் ஆண்டுகளில் சரியான தீர்மானம் மேற்கொண்டிருந்தார் என இராஜாங்க அமைச்சர் எரான் விக்ரமரத்ன தெரிவித்துள்ளார்.

அதனைபோல, 2019 ஆம் ஆண்டும் பிரதமர் சரியான தீர்மானத்தை மேற்கொள்வார் என்றும் அவர் நம்பிக்கை வெளியிட்டுள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் –

அமைச்சர் சஜித் பிரேமதாஸ, ஜனாதிபதி வேட்பாளராக உத்தியோகபூர்வமாக தெரிவு செய்யப்படவில்லை.நாட்டில் உள்ள பெரும்பான்மையான மக்களே அமைச்சர் சஜித் பிரேமதாஸவை ஜனாதிபதி வேட்பாளராக தெரிவு செய்துள்ளனர் –என்றார்.

## கோட்டாவின் குடியுரிமை குறித்து பதிலளிக்க மறுத்த அமெ. தூதுவர்



கொழும்பு, ஓக. 21
முன்னாள் பாதுகாப்புச் செயலர் கோட்டாபய ராஜபக்ஷவின் அமெரிக்கக் குடியுரிமை துறப்பு தொடர்பாகப் பதிலளிக்க முடியாது என்று அமெரிக்கத்தூதுவர்அலைனாரெப்லிட்ஸ் தெரிவித்துள்ளார்.

நேற்று முன்தினம் கொழும்பில்உள்ளதனது இல்லத்தில் குறிப்பிட்ட சில ஊடகவியலாளர்களைச் சந்தித்துப் பேசிய போதே அவர் இவ்வாறு கூறினார்.

இந்தச் சந்திப்பின் போது, அமெரிக்கப் பதிவாளர் திணைக்களத்தினால் வெளியிடப்பட்டுள்ள, குடியுரிமை துறந்தவர்களின் பட்டியலில், கோட்டாபய ராஜபக்ஷவின்பெயர்இடம்பெறாமை குறித்துகேள்விகள் எழுப்பப்பட்டன.

இது குறித்து கருத்து வெளியிட்ட அமெரிக்கத் தூதுவர் –

குடியுரிமையைக் கைவிடுவது ஒரு நிர்வாகச் செயல்முறையாகும். குடியுரிமையைக் கைவிடுவதற்கு அதற்கான படிமுறைகளைப் பின்பற்ற வேண்டும். எனினும்,எந்தவொரு தனிப்பட்ட நபரினதும், குடியுரிமை துறப்பு தொடர்பாகவும் கருத்து வெளியிட முடியாது, அமெரிக்கச் சட்டங்கள் அதனைத் தடுக்கின்றன.

எனினும், ஒருவரின் குடியுரிமைதுறப்பு விடயத்தில், அமெரிக்க பதிவாளரின் பதிவுகள் சில மாதங்கள் பிந்தியதாக இருக்கலாம் என்று கூறினார்.

# வடக்கு மீனவர் பிரச்சினைகளை தீர்ப்பவருக்கே தேர்தலில் ஆதரவு

## தேசிய மீனவர் ஒத்துழைப்பு இயக்கம் அறிவிப்பு

**வவுனியா, ஓக. 21
வடக்கு மாகாண மீனவர்களின் பிரச்சினைகளைத் தீர்ப்பவர்களுக்கே எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் வாக்களிப்போம் எனத் தேசிய மீனவர் ஒத்துழைப்பு இயக்கம் தெரிவித்துள்ளது.
தேசிய மீனவர் ஒத்துழைப்பு இயக்கம் மற்றும் வடக்கு மாகாண கடற்றொழிலாளர்கள் இணையம் ஆகியவற்றின் பிரதிநிதிகள் இணைந்து வவுனியா விருந்தினர் விடுதியில் நேற்றுமுன்தினம் நடத்திய ஊடகவியலாளர் சந்திப்பிலேயே இவ்வாறு கூறப்பட்டது.**

அவர்கள்மேலும்தெரிவிக்கையில்–

வடபகுதி மீனவர்கள் போரிருக்கு முன்னரும் சரி அதற்குப் பின்னரும் சரி நிம்மதியான வாழ்வை வாழ்கின்றார்களா என்றால் அதற்கான பதில் கேள்விகுறியானதாகவே இருக்கிறது. வடக்கில் நடைபெற்று வரும் சட்ட விரோதமான மீன்பிடி முறை மற்றும் தென்னிலங்கை மீனவர்களின் வருகைதொடர்பாகபொறுப்புவாய்ந்த அதிகாரிகளுக்கு பலமுறை நாம் தெரியப்படுத்தியும் உரிய தீர்வுகள் இதுவரை கிடைக்கவில்லை.

குறிப்பாக முல்லைத்தீவின் நாயாறு, அளம்பில் போன்ற பகுதிகளில்சிலாபம், நீர்கொழும்பு, கற்பிட்டி,



வென்னப்புவ போன்ற பகுதிகளில் இருந்துவருகைதந்துள்ளமீனவர்கள் நிரந்தரமான வாடிகளை அமைத்து மீன்பிடி நடவடிக்கைகளை மேற்கொண்டுவருகின்றனர்.நாம்அனைத்துத் தரப்புகளுடனும் கலந்துரையாடி தென்னிலங்கையை சேர்ந்த 32 படகுகளுக்கு தொழிலில் ஈடுபட அனுமதி வழங்கியிருந்தோம். அது தற்போது 500 ஆகப்பெருகியுள்ளது. அதில் 200 றக்கும் மேற்பட்டவர்கள் எந்தவித பதிவுகளும் இல்லாமல் மீன்பிடியில் ஈடுபட்டுவருகின்றார்கள்.

இது தொடர்பாக நாம் ஆளுநருக்குத் தெரியப்படுத்திய நிலையில் அவர் அதிகாரிகள் மற்றும் மக்கள் பிரதிநிதிகளைஅழைத்துகடற்றொழில் அமைச்சுடன் கலந்தரையாடி அடுத்த முறை நடைபெறவுள்ள முல்லைத்தீவு மாவட்ட ஒருங்கிணைப்புக் கூட்டத்தின்போது தெளிவான முடிவு ஒன்றைத்தெரிவிக்கவேண்டும்என்று தெரிவித்திருந்தார்.

எனினும் இதுவரை எங்களை எந்தநாடாளுமன்றஉறுப்பினர்களும் அணுகாத நிலையில் முடிவில்லாமல் இந்தப் பிரச்சினை இருக்கிறது. அத்துடன் எமது கடற்பரப்பில் சுருக்கு வலையைப் பயன்படுத்தி மீன்பிடி நடவடிக்கைகள்மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

அத்துடன்சுண்டிக்குளம்தொடக்கம் நாயாறு வரையான ஆற்றுப் பகுதி பறவைகள் சரணாலயமாக பிரகடனப்படுத்தப்பட்டுள்ளது. இதனால் எமது தொழில் மேலும் பாதிப்பைச் சந்தித்துள்ளது. அத்துடன் கிளிநொச்சியின் சிறு கடற்பரப்புகளில் இழுவைப் படகுகள் பயன்படுத்தி மீன்பிடிக்கப்பட்டு வருவதுடன் டைனமற்றும் பயன்படுத்தப்பட்டு வருகிறது. இதனால் கிளிநொச்சி மாவட்ட மீனவர்கள் பெரும் பாதிப்புகளைச் சந்தித்து நிற்கின்றனர்.

ஒருபக்கம் கடல் வளம் மறுபக்கம் நிலவளம் என இந்த அரசு திட்டமிட்டு அனைத்தையும் சூறையாடி வருகின்றது. இதனைக் கண்டும் காணாதுபோல எமது நாடாளுமன்ற உறுப்பினர்கள் இருக்கின்றனர். எனவே எமது கோரிக்கையை நீதியான முறையில் தீர்ப்பவர்களுக்கே எதிர்வரும் ஜனாதிபதி தேர்தலில் வடக்கின் கடற்றொழிலாளர் சமூகம் வாக்களிக்கும் – என்றனர்.

இந்த ஊடக சந்திப்பில் தேசிய மீனவ ஒத்துழைப்பு இயக்கத்தின் வடக்கு – கிழக்கு இணைப்பாளர் அன்ரனி ஜேசுதாஸ், வடக்கு மாகாண கடற்றொழிலாளர் இணையத்தின் தலைவர் என்.எம்.ஆலம், கிளிநொச்சி கடற்றொழிலாளர் இணையத்தின் தலைவர் ஜோசப் பிரான்சிஸ் மற்றும் முல்லைத்தீவு மாவட்ட மீனவர் சமாசங்களின் தலைவர் ஆகியோர் கலந்துகொண்டனர். (ஐ)




இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.30 இந்துக் கல்லூரி வீதியிலுள்ள காலைக்கதிர் பிறஸ் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 21.08.2019 இல் வெளியிடப்பெற்றது.